# ஜாமக்காரன்
# JAMAKKARAN

ஜா ம க் கா ர ன்

JAMAKKARAN

(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள் 1 தெச. 5:21
ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவறாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி. 2:15


**VOLUME - 8 Reg No.TNBIL/2016/70171 ISSUE - 7**

**JULY 2024 TAMIL & MALAYALAM**

**ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=**



Mob.: No. **9894261333**

0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com




கர்த்தருக்குள் அன்பானவர்களே !

உங்களுக்கு வாழ்த்துக்களை கூறுகிறேன்.

புதிய வாசகர்கள் எண்ணிக்கை கூடிய படியால் 1983ம் வருடம் எழுதிய கட்டுரையை மறுபடியும் வெளியிட வேண்டியதானது. குறிப்பிட்டு ஒரு கட்டத்தில் இயேசு அழைக்கிறார் குடும்பத்தைப்பற்றியும், அவர்களின் பொய் சாட்சிகளை பற்றியும் மறுபடியும் எழுத நேர்ந்தது.

வாசகர்கள்அனுப்பிய கணிக்கைகள் எதுவும் தவறாமல் வந்த சேர்ந்தது. நன்றி. Online, NEFT வழியாக அனுப்பிய காணிக்கையும் வந்த சேர்ந்தது. பணம் அனுப்பிய விவரத்தை e-mail, whatapp வழியாக எனக்கு தெரிவித்தவர்களுக்கு மட்டும் **தொலைபேசியிலும்** e-mail வழியாகவும் நன்றி விவரத்தை பற்றி பதில் அறிவக்க முடிந்தது. பல வருடங்களாக தொடர்ந்து காணிக்கை அனுப்பியவர்கள் ஏராளமாணவர்கள் என்பதில், எதுவும் எதிர்பாராமல் காணிக்கையை தொடர்ந்து அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட வாசகர்களுக்கு என் நன்றியை தெரிவித்துக்கொள்கறேன். மற்ற வழியாக M.O., Cheque வழியாக அனுப்பியவர்களுக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன். அவர்களுக்கு உடனடியாக என் மனைவி ரசீதும் கடிதமும் எழுதி நன்றி தெரிவித்துவிடுகிறார்கள்.

கர்த்தருடைய கிருபை உங்கள் அனைவரோடும் இருப்பதாக.

**-Dr. Pushparaj**

# JULY - 2024

**கர்த்தருக்குள் அன்பான வெளிநாட்டு – இந்தியா ஜாமக்காரன் வாசகர்களுக்கு,**

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்,

கடந்த 6 மாத ஜாமக்காரன் உங்களுக்கு சரியான நேரத்தில் அனுப்ப முடியாததை எண்ணி வருந்துகிறேன். பொறுத்துக்கொள்ளுங்கள். இதற்கு காரணம் ஸ்டாம்ப்பின் ஏற்றத்தாழ்வுகள் மற்றும் அச்சகத்தின் கால தாமதம் ஆகும். ஆகையால் இதற்கு மாற்று ஏற்பாடாக உங்களுக்கு சாதகமானால் **e-mail** மூலமாக **pdf format** ல் அனுப்பினால் ஏதுவாக இருக்கும் என்று கருதுகிறோம்.

ஆகையால் உங்களது **e-mail id** யையும் மற்றும் உங்கள் கைபேசி எண்ணையும் எங்கள் **e-mail ID** களான **jamakaran@yahoo.com** மற்றும் **jaamakkaran@gmail.com** என்ற **id** வழியாக எங்களுக்கு தெரிவிக்க வேண்டுகிறேன்.

**வெளிநாட்டிலிருந்து காணிக்கை அனுப்ப விரும்பும் வாசகர்களுக்கு,**

இந்திய அரசாங்கம் வெளிநாட்டு காசோலையை (Cheque) இப்போது அனுமதிப்பதில்லை.

ஆகவே ஆவியானவர் உங்களை ஏவினால் **MONEY GRAM (OR) WESTERN MONEY** வழியாக கீழ்க்காணும் வங்கிக் கணக்குக்கு நேரடியாக உங்கள் காணிக்கையை அனுப்பலாம். நீங்கள் எனக்கு அனுப்பியதை **e-mail (or) whatsapp** மூலமாக தெரிவிக்க வேண்டுகிறேன். **-Dr. Pushparaj**

## ONLINE BANKING (NEFT)
**Name : M G E PUSHPARAJ**

**STATE BANK OF INDIA**

IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842 **A/C No: 10764116842**
SWIFT CODE - SBININBB300 **A/C No: 10764116842**

**CANARA BANK - SALEM** (SURAMANGALAM BRANCH)

IFSC CODE - IFSC CNRB0001219- 1219101013622. **A/C No: 1219101013622.**
SWIFT CODE - CNRB0001219 -1219101013622. **A/C No: 1219101013622.**



P. THAYAMMAL,
Teacher, Sivakasi

## மரண அறிவிப்பு

தமிழ்நாட்டில் சிவகாசி என்ற இடத்தில் **சகோதரி. தாயம்மாள்** கர்த்தருக்குள் மரித்துப் போனார். கடந்த 40 ஆண்டுகளாக **ஜாமக்காரன் வாசகியாயிருந்து** மாதா மாதம் தொடர்ந்து காணிக்கைகளாலும் ஜெபத்தினாலும் தாங்கி வந்தார். இவர் டீச்சராக பணியாற்றி ஓய்வு பெற்றவர். இவர் தமது 3 பெண் பிள்ளைகளையும் நல்ல விதத்தில் வளர்த்து பேரப்பிள்ளைகளும் நன்றாக படித்து வெளிநாடுகளில் பணியாற்றுகிறார்கள். தாயையும், தகப்பனையும் இழந்த பிள்ளைகளுக்கும் பேரப்பிள்ளைகளுக்கும் கர்த்தர் ஆறுதல் அளிப்பாராக. இவர் தனது 85 வயதில் கடந்த 23.8.24 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

என்னை தங்கள் குடும்பத்தில் ஒருவனாய் என்னையும் என் மனைவியையும் மிகவும் நேசிப்பார். கர்த்தருடைய கிருபை அவர்கள் குடும்பத்தோடு இருப்பதாக.

# உன்னைப் பற்றி... ...என்னைப் பற்றி

1983 பிப்ரவரி மாதம் ஜாமக்காரனில் நான் எழுதிய இச்செய்தியை இப்போதுள்ள மாறாத அதே பிரச்சனையுள்ள சூழ்நிலையில் மறுபடியும் இதை வெளியிடுகிறேன். பல ஆயிரம் **புதிய வாசகர்கள்** நான் எழுதிய இச்செய்தியை அறியவில்லை.

மற்றவர்களை **குறைகூறி** எழுதுகிறாயே? உன்னைப்பற்றி என்ன? என்று எழும்பும் கேள்விகளுக்கு பதில் அளிக்கவேண்டி எழுதப்பட்ட இந்தக் கட்டுரையை நீங்கள் வாசிக்கும்போது நான் இப்படியெல்லாம் எழுதும் நோக்கங்கள் என்ன? என்று உங்களுக்கு விளங்கும்

## உன்னைப் பற்றி...

கர்த்தருக்கு ஊழியம் செய்யும் **விசுவாசிகள்** அல்லது **ஊழியக்காரர்களில் பலர்** மற்றவர்கள் தன்னைப்பற்றி கூறும் **காரணமில்லாத குற்றச்சாட்டுகளால்** மனவேதனைகொண்டு சகிக்க முடியாமல் கடிதங்கள் மூலமும் நேரிலும் என்னோடு பகிர்ந்து கொண்டு மனம் குமுறி அழுது இருக்கிறார்கள்.அன்பானவர்களே! எந்த **ஒரு விசுவாசிக்கும்** இந்த உலகில் **போராட்டம் உண்டு**. **எதிர்ப்பு** இல்லாத ஊழியமோ, **தடைகள்** இல்லாத ஆவிக்குறிய ஜீவியமோ கிடையாது. ஒருவேளை சில ஊழியர்களுக்கு ஊழியம் தொடங்கிய ஆரம்ப காலகட்டத்தில் **பிரச்சனை இல்லாமல்** இருந்திருக்கலாம். ஆனால் ஊழியம் வளர்ந்த பின் அல்லது அவர்கள் ஊழியத்தில் **பிரபலமாகும்போது** அல்லது **உயர்வு** உண்டாகும்போது நிச்சயம் பிரச்சனை உண்டாகும். அதுவும் நம்மோடு இருப்பவர்களும் நம்மைப்பற்றி நன்றாக அறிந்தவர்களுமே **நமக்கு விரோதமாக** பேசும்போது அல்லது **எழுதும்போது** மனுஷீகத்தில் மனம் குமுறுவது இயற்கைதான். என் ஊழிய ஆரம்பகாலத்தில் இதே வேதனையை நானும் அனுபவித்தவன்தான்.

1964ல் **என்னை முதல் ஊழியத்தில் ஈடுபடுத்தியவரும்,** ஊக்குவித்தவருமான அந்த நபரே என்மேல் பொறாமை கொண்டார். நானும் அவரும் பிரசங்கித்த கூட்டங்களில் **தன் பிரசங்கத்தைவிட என் பிரசங்கத்தை** எல்லாரும் விரும்புகிறார்கள் என்று மக்களும் ஆயர்களும் கூறுவதை அறிந்தபின் அந்த ஆயர்களிடம் Dr. புஷ்பராஜ் **சிறுவயது வாலிபன்** அவரை பெரிய கூட்டங்களுக்கு

அழைக்க வேண்டாம் என்று பல குருமார்களிடம் கூறியதாக அறிந்து, அவர் உள்ளத்திலும் **பொறாமை** உண்டென்றும் தாழ்வு மனப்பான்மை (Complex) உண்டு என்றும் அறிந்து வியந்தேன் என்றாலும் பலர் அவர் என்னைப் பற்றி கூறியதை அலட்சியம் செய்து என்னை **பெரிய கூட்டங்களில்** பிரசங்கம் செய்ய உபயோகப் படுத்தினார்கள்.

என் இயேசு என் ஊழிய ஆரம்பத்திலேயே பல வேதனைகளின் வழியாக என்னை நடத்தினார் **இப்படிப்பட்ட பயிற்சிக்கு என்னை அனுமதித்து என்னை** நன்றாக பக்குவப்படுத்தினார். **பவுல்** வாலிப ஊழியனுக்கு கொடுத்த ஆலோசனையில் **தீங்குஅனுபவி.** 2 தீமோ 2:3,3:12,4:5 என்றே கட்டளைக்கொடுக்கிறார். இந்த வசனங்கள் என்னை ஊழியத்தில் பலவித கஷ்டங்கள் அனுபவித்த காலத்தில் என்னை பக்குவப்படுத்தின. இப்போதும் எனக்கு மற்றவர்களால் ஏற்படும் புதுப்புது பிரச்சனைகள் என்னை தாக்காமல் இல்லை. ஆனால் ஏற்கனவே நான் பெற்ற **பயிற்சியும்,** கர்த்தருடைய **வசனமும்** என்னை இப்போதும் என் ஊழியத்தில் பெலப்படுத்துகிறது. ஆறுதலையும் தருகிறது.

முன்பெல்லாம் யாராவது என்னைப்பற்றி தவறாக கூறினால் எங்காவது தனியாக சென்று ஏன் இப்படி அவர்கள கூறினார்கள் என்று இயேசுவிடம் அழுது முறையிடுவேன். அப்போது இயேசு ஒரு **நண்பன்** மற்றொரு **நண்பனை** தேற்றுவதுபோல் மகனே **என்னையும் என் வாழ்க்கையும் கவனித்தாயா?** எனக்கு வந்த அதே வேதனை **அவமானம்** உனக்கும் உண்டாகிறது. நான் எப்படியெல்லாம் அவைகளை **சகித்தேன்** என்பதை **கவனி** என்று கூறி என்னை தேற்றினார்.

பவுலும் **அவரே** (இயேசுவே) **எங்களுக்கு ஆறுதல்** 1 கொரி 1:4 என்று தங்கள் அனுபவத்தை கூறி நமக்கும் **ஊழியத்தில்** அல்லது **விசுவாச வாழ்க்கையில்** பிரச்சனை **அவமானம் வரும்போது அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்** என்று ஆலோசனை கூறுகிறார். எபி 12:3 கிறிஸ்துவின் **பாடுகள்** எங்களிடத்தில் **பெருகுகிறது போல** கிறிஸ்துவினாலே எங்களுக்கு **ஆறுதலும்** பெருகுகிறது. 1கொரி 1:5 என்றும் கூறினார். மேலும் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசக்கிறதுக்கு மட்டும் அல்ல **அவர் நிமித்தம் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது**. பிலி 1:29 என்றார்.

சமீபத்தில் ஒருவர் ஐயா நான் செய்யாத தவறை செய்ததாக கூறும்போது அல்லது சந்தேகப்படும்போது என்னால் சகிக்க முடியவில்லை என்று கூறி வேதனைப்பட்டார். ஆம் இன்றும் அனேகர் அப்படி வேதனைப்படுகிறார்கள். அன்பானவர்களே! இயேசுவை சற்று கவனியுங்கள்.

**பிசாசின் கிரியைகளை அழிக்கவே** மனுஷ குமாரன் இந்த உலகத்தில் வந்தார் என்று வேத புஸ்தகம் கூறுகிறது. ஆனால் அன்றைய ஜனங்கள் இயேசுவையே **பிசாசின் தலைவன்** என்றார்கள். **அவர் மனம் என்ன வேதனைப்பட்டிருக்கும்**!. அவர்கள் அப்படி பேசியதைக் குறித்து யாரிடமும் **வாக்குவாதம்** செய்யவில்லை! **கோபப்படவுமில்லை.** !!

வேதம் கூறுகிறதை கவனியுங்கள். **சொல்லப்படும் எல்லா வார்த்தைகளையும் கவனியாதே** பிர. 7:21 மனுஷர்கள் உன்னைப்பற்றி இல்லாத ஒன்றை தவறாகக் கூறினால் அதை கவனிக்காமல் விட்டுவிடு. இப்படியா கூறினார்கள் ? இப்படியா எழுதினார்கள்? என்று யோசிக்கும்போது **உன்னால் ஊழியமே செய்ய முடியாது.** பழம் உள்ள மரத்தில் தான் கல் விழும் என்பார்கள். இது என் அனுபவித்தில் பலமுறை நடந்தது.

மேலே சொன்ன **வசனத்தில்** மற்றவர்கள் நம்மைப் பற்றி கூறும் **எல்லா வார்த்தைகளையும் கவனியாதே** என்று கூறும்போது மற்றவர்கள் உன்னைப்பற்றி கூறிய சில **வார்த்தைகளில்** அல்லது **குற்றச்சாட்டில் உண்மையிருக்குமானால்** அந்த **சில வார்த்தைகளை** அல்லது அந்தக் **குற்றச்சாட்டை நிச்சயமாக நாம் கவனிக்க வேண்டும்.**அவர்கள் கூறிய குற்றச்சாட்டில் **சிலது உண்மையான குற்றச்சாட்டுகள்** தான் என்று உன் **மனச்சாட்சியில் உணர்வாயானால்** அதை சரிப்படுத்திக்கொண்டு அல்லது **மன்னிப்பு கேட்டுவிட்டு உன்னை சரிப்படுத்திக் கொள்வது** உன் ஆத்துமாவுக்கு நல்லது. இப்படி கூறி விட்டார்களே? அல்லது இப்படி எழுதி விட்டார்களே? என்னைப்பற்றி கூற இவர்களுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது என்று அவர்கள்மேல் கோபப்பட்டு பிரயோஜனமில்லை.

உன்னைக்குறித்து கர்த்தர் எதிர்பார்ப்பது என்ன தெரியயுமா? **நீயோ எல்லாவற்றிலும் மன தெளிவுள்ளவனாயிரு**. தீங்கனுபவி. **சுவிசேஷகனுடைய வேலையை செய்**. உன் ஊழியத்தை **நிறைவேற்று என்பதாகும்.** (1 தீமோ 4:5) இதில் இரண்டாவது கட்டளையாக கூறப்படும் **தீங்கனுபவி** என்ற வார்த்தையை விசுவாச ஜீவியத்தில் வளரும் ஒவ்வொரு விசுவாசியும் அல்லது ஊழியர்களும் கவனிக்கத் தயங்கக் கூடாது.

1 தீமோ 3:12 **கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்** என்று பவுல் எழுதியுள்ளார். இங்கிலாந்து பழைய பிரதமருக்கு ஒரு அகம்பாவம் இருந்தது. அது என்ன தெரியுமா? I Like to Learn but I refuse to be taught (Mr.Churcil) இங்கிலாந்து தேசத்து பிரதமர் இப்படியாக கூறுவாராம். **அதாவது நான் எதையும் கற்றுக்கொள்ள விரும்புகிறேன்.ஆனால் மற்றவர்கள் யாரும் என்க்கு உபதேசிப்பதையோ ஆலோசனைக் கொடுப்பதையோ நான் விரும்ப மாட்டேன்** என்று கூறுவாராம். நம்மைப்பற்றி நாமே தவறாக கேள்விப்படுவது அல்லது மற்றவர்கள் நம்மை குற்றப்படுத்துவது **சில விஷயத்தில்** அது நமக்கு நல்லது. இதன் மூலம் **நாம் அறியாத** நம்மை பற்றிய **சில குறைகளை நாம் உணரமுடியும். அதை திருத்திக்கொள்ளவும் முடியும்.**

இடிப்பாரை யில்லாத ஏமரா மன்னன்
கெடுப் பாரிலானும் கெடும் – திருவள்ளுவர்

**ஒரு ராஜாவின் தவறுகளை** ஒருவன் **விமர்சிக்காவிடில்** அல்லது **சுட்டிகாட்டா விட்டால் மற்றவர்கள்** அந்த ராஜாவை **கெடுக்காமலே** அவர் தன்னை **தானே** கெடுத்துக்கொண்டு அழிந்து விடுவார் என்பதுதான் இந்த குறளின் அர்த்தமாகும்.

ஆகவே யார் நம்மைப்பற்றி குறை கூறினாலும் எழுதினாலும் அந்தக் குற்றச்சாட்டில் உள்ள **(உன்னைப்பற்றிய) தவறுகளை** சரிப்படுத்தக்கொள்வது உன் ஆத்துமாவுக்கு மிகவும் நல்லது. அப்போதுதான் ஆவிக்குறிய ஜீவியத்தில் நீங்கள் மேலே மேலே வளரலாம்.

தேவன் தெரிந்து கொண்டவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? ரோ. 8:33 உன்னைப்பற்றி தவறாக யாராவது குறை கூறினார்களேயானால் கர்த்தரே உனக்குபதில் அவர்களோடு போராடுவார். உன்மேல் காரணமில்லாமல் குற்றம் சுமத்திய அவர்களை கர்த்தர் ஒரு நாளும் சும்மா விடமாட்டார்.

பேசின கடின வார்த்தைகள் எல்லாவற்றினிமித்தம் **அவர்களைக் கண்டிக்கிறதற்கு** கர்த்தர் வருகிறார். யாத் 1:5.

## வீட்டில் சாட்சி ஆரம்பிக்க வேண்டும்.

- **உன்னைப்பற்றி** முதலில் எச்சரிக்கையாயிருக்க வேண்டியது **உன் வீட்டில்தான்**. உன் சொந்த வீட்டில் நீ **மதிக்கப்படுகிறாயா?** என்பதை கவனி. அப்படி இல்லையென்றால் வீட்டில் நீ **சாட்சியாக இல்லை** என்று தான் அர்த்தம்.

ஒரு ஊழியக்காரன் இப்படி கூறுகிறான். **என் மனைவி என்னை மதிப்பதே இல்லை.** எத்தனையோ இடங்களில் நான் பிரசங்கிக்கிறேன். பலர் என் ஜெபத்துக்காக என்னை தேடி என் வீட்டுக்கு வருகிறார்கள். என்னை வெகுவாக மதிக்கிறார்கள், ஆனால் **என் மனைவியோ என்னை மதிப்பதில்லை** என்று கூறி வேதனைப்பட்டார், மனைவியை விசாரித்தால் அவள் கூறுகிறாள். ஐயா என் புருஷன் வெளியில் நன்றாக பிரசங்கிக்கிறார். ஆனால் **வீட்டில் சிறுசிறு விஷயத்துக்கெல்லாம் பொய் பேசுகிறார்.** என்னை காரணமில்லாமல் சந்தேகப்படுகிறார். **ஆபாச வார்த்தைகளை** உபயோகித்து **தமாஷ் பேசுகிறார்.** எப்போதும் என்னோடு சண்டை போடுகிறார். பிரசங்கம் தயார் செய்ய மட்டுமே அவர் எப்போதாவது **பைபிள் வாசிக்கிறார்.** மற்றபடி அவர் **தனக்காக பைபிள்** வாசிப்பதையோ, **ஜெபிப்பதையோ** நான் காண முடிவதில்லை. **இப்படிப்பட்ட ஒருவரை எப்படி ஆவிக்குரியவராக நான் மதிக்க முடியும்**? கணவன் என்ற மதிப்பை மட்டுமே அவருக்கு கொடுக்கிறேன் என்று அந்த ஊழியரின் மனைவி கூறுகிறாள்.

என் வீட்டில் உறவினர் சிலரோடு ஒருநாள் என் மனைவி **வதனி புஷ்பராஜ்** பேசிக்கொண்டு இருக்கும்போது அவர்களிடம் அவர் (என் கணவர்) **தமாசுக்குக்கூட பொய் சொல்ல மாட்டார்** என்று என் மனைவி என்னைப்பற்றி மற்றவர்களிடம் கூறக்கேட்டேன்.அது எனக்கு எவ்வளவு பெரிய பெருமையாக இருந்தது! கர்த்தரக்கு ஸ்தோத்திரம்.

**என் மகன்** சிறுவனாக இருந்தபோது என் மனைவி அவனை கண்டிக்கும் போது **மகனே! டாடிக்கு பொய் சொல்வது பிடிக்காது** தெரியுமல்லவா? நீ **பொய் பேசினால் நன்றாக அடி விழும் ஜாக்கிறதை!** என்று அவனை எச்சரிப்பார் . இவைகள் என் வீட்டில் என் ஜீவியத்தின் எதிரொலிகள் ஆகும். என் மனைவி பெண்கள் மாநாடுகளுக்கு **ஊழியத்துக்கு பிரசிங்கிக்க போகும்போது** என்னை ஜெபம் பண்ணி அனுப்புங்கள் என்று **என் முன்வந்து** நிற்பார். மற்றவர்களுக்கு ஜெபிப்பது போலவே அவரையும் **கைவைத்து ஜெபித்து அனுப்புவேன்**.

காரணம் என் கணவன் **ஜெபிப்பவன் என்பதை என் மனைவி அறிந்திருக்கிறார்**. அப்படியே என் மனைவி ஜெபித்து தன் அறையை விட்டு வெளியே வந்தால் மற்ற சமயத்தில் அவரிடம் பழகுவதுபோல அவரைத் தொட்டுப்பேசமாட்டேன். காரணம் அது என் மனைவிக்கு கொடுக்கும் **ஆவிக்குறிய மரியாதையாகும்.** என் மனைவி ஆவியில் நிறைந்து மணிக்கணக்காய் ஜெபிப்பதையும் **வேதம் வாசித்து** தியானிப்பதையும் **நான் அறிவேன்**. அதை பலமுறை கண்டிருக்கிறேன். அதனால் அவர்மேல் ஏற்பட்ட ஆவிக்குறிய **மரியாதைதான்** அது. இப்படிப்பட்ட என் அனுபவங்களை நான் எழுதுவதால் இது **என்னைப்பெருமை படுத்துகிறது** என்றாலும் உங்கள் பிரயோஜனத்துக்காக நான் இதை இங்கு குறிப்பிடுவது அவசியமே!

இப்படியாக வீட்டில் கணவன் **மனைவியின் ஜீவியத்தை** கவனிக்கிறான். மனைவி கணவனின் நடவடிக்கைகளை கவனிக்கிறாள். ஆகவே ஒருவர்முன் ஒருவர் **தன் சாட்சிளை** ஜாக்கிறதையோடு காத்துக்கொண்டால் அந்த வீடு **சண்டை, மனஸ்தாபம்** இன்றி ஒரு **குட்டிப் பரலோகம்** போல இருக்கும். நானும் என் மனைவியும் மட்டும் வீட்டில் இருந்தாலும் வீட்டில் எப்பவும் OOOO சிரிப்புமாகத்தான் இருக்கும். என் வீட்டில் என் மனைவிக்கு உதவி செய்யவும் முழு வீட்டையும் கவனிக்கவும் ஒரு பெண் இருக்கிறார். நாங்கள் ஜெபிப்பதை கண்டு எங்கள் குடும்ப ஜெபத்தில் அவளும் நன்றாக ஜெபிக்கிறார். கடந்த **29 வருடமாக** எங்களுக்கு உதவி செய்யும் அந்த பெண் **எழுத படிக்க தெரியாதவள்**. நாங்கள் **வேதம்** வாசிப்பதை ஜெபிப்பதை அவள்தன் **காதால் கேட்டு** அவளும் எங்கள் குடும்ப ஜெபத்தில் ஜெபிப்பார். அதுவும் **வசனங்களை குறிப்பிட்டு** ஜெபிப்பார்.அது எங்களை ஆச்சரியப்படுத்தியது. அதிகாலை அவள் சமையல் வேலையை துவக்குவதற்குமுன் தலையை முக்காடிட்டு சின்ன ஜெபம் செய்துவிட்டுதான் அடுப்பை பற்றவைப்பார். கடந்த 29 வருடமாக என் மனைவிக்கு வலதுகைபோல் மிகவும் உதவியாக இருக்கிறார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

- ☐ ஒரு வாலிபப் பையன் பல கூட்டங்களில் சாட்சி சொல்வான், இரட்சிக்கப்பட்டவன். ஆனால் வீட்டில் மட்டும் அவனுக்கு நிம்மதி இல்லை என்று கூறுவான். காரணம், அவன் சரியாக படிப்பதில்லை வீட்டில் மற்ற உடன்பிறப்புகளோடு சண்டை. பெற்றோருக்கு கீழ்படிவதில்லை ஆகவே வீட்டில் அவனுக்கு சாட்சியும் இல்லை. வீட்டில் அவனுக்கு நிம்மதியும் இல்லை. இதை என்னிடம் கூறினாள்.

**உன் இரட்சிப்பின் மாற்றத்தை** உன் கீழ்படிதலின் மூலம் உன் செய்கைகளின் மூலம் உன் ஜெப வாழ்க்கையின் மூலம், முதலில் உன் வீட்டில் உன்னை காண்பித்தால் இரட்சிக்கப் படாதவர்கள் உன் வீட்டில் இருந்தால்கூட உன்னுடைய சாட்சி மூலம் உனக்கு **தனி மரியாதை** உண்டாகும் என்று ஆலோசனை கூறினேன்.

- ☐ பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது **விசுவாசிகளுக்கு மாதிரியாக இரு**. என்று 1 தீமோ 4:12ல் கூறுகிறார்.

**அவிசுவாசிகளினிடையில்** ஒருவன் முன் **மாதிரியாக ஜீவிப்பது எளிது** ஆனால் **விசுவாசிகளுக்கு முன்மாதிரியாக** ஜீவிப்பதைத் தான் கர்த்தர் நம்மிடம் மிகவும் எதிர்பார்க்கிறார். ஒரு விசுவாசி மற்றொரு விசுவாசியைவிட **அன்பிலும் சாட்சியிலும்** ஒருவருக்கொருவர் மேலோங்கி ஜீவிக்க வேண்டும் என்பதுதான் கர்த்தரின் எதிர்பார்ப்பு. பள்ளிக்கூடத்தில் அலுவலகத்தில் கிறிஸ்தவ ஊழிய ஸ்தாபனங்களில் உள்ள விசுவாசிகள் அல்லது ஊழியர்கள் மேலே சொன்ன மிகமிக முக்கிய விஷயங்களை கவனிக்கவும்.

**உங்களைப் பற்றி** கர்த்தருக்குமுன் உங்களுக்கு **குற்றமற்ற மனசாட்சி** இருக்குமானால் எதைக்குறித்தும், **யார் உங்களைப்பற்றி தவறாக பேசினாலும்** பயமோ, கலக்கமோ, மனவேதனையோ உண்டாகாது. உங்களுக்கு வரும் எதிர்ப்புகளில் ஆத்திரப்படாமலிருந்து பொறுமையினால் உங்களைக் காத்துக்கொள்ளுங்கள்.

**சவுல் ராஜாவான** புதிதில் அவனைக் குறித்து மற்றவர்கள் எப்படியெல்லாம் பேசினார்கள் தெரியுமா? 1 சாமு 11:27 கூறுகிறது. அவனோ **காது கேளாதவனைபோல் இருந்தான்** . தாவீதும் அதே அனுபவத்தை தன் வேதனையில் வெளிப்படுத்தினார். சங் 38:13. **நானோ செவிடனைப் போல காது கேளாதவனாயும், ஊமையனைப்போல வாய் திறவாதவனாகவும்** இருக்கிறேன் என்று எழுதி இருக்கிறார். அருமையானவர்களே, மேற்கூறிய இந்த அனுபவம் வளர்ந்து வரும் விசுவாசிகளுக்கு அல்லது ஊழியர்களுக்கு கண்டிப்பாக வேண்டும். உங்களைப்பற்றி மற்றவர்கள் **உங்கள் மனது நோகும்படியாக** கூறும் வார்த்தைகளை வெருமனே கேட்டுக் கொண்டு இருப்பது நல்லது.

உங்களைப்பற்றி பிழையாக மற்றவர்கள் எழுதுவதையோ, பேசுவதையோ கவனித்து கொண்டிருந்தால் ஊழியத்தில் நீங்கள் முன்னேறவே முடியாது. ஆவிக்குறிய விஷயத்தில் வளரவும் முடியாது. **நீ பிரபலமாகாதவரை** உனக்கு பிரச்சனை இல்லை. ஆனால் ஊர், உலகத்தில் உன் பெயர் **பிரசித்து பெறும்போது** எல்லோருடைய பார்வையும் உன்மேல் விழும். அப்போது உன் ஒவ்வொரு சிறு அசைவும், சிறு தவறும் மிகப்பெரியதாகும். அந்தத்தவறு காட்டுத்தீபோல மக்களிடையே பரவும். ஆகவே மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும்!

தடைகள் இடறல்கள் கண்டிப்பாக விசுவாசிகளின் ஜீவியத்திலும், எல்லோருடைய ஊழியத்திலும் உண்டாகும். இயேசு சொன்னார். **இடறல்கள் வராமல் போவது கூடாத காரியம்.** ஆகிலும் அவைகள் **எவனால்** வருகிறதோ அவனுக்கு ஐயோ!

கிறிஸ்துவினிடத்தில் **விசுவாசிப்பதற்கு** மாத்திரமல்ல. **அவர் நிமித்தமாய் பாடுபடுகிறதற்கும்** உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது. பிலி 1:29. நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் **நீங்கள் நிந்திக்கப்பட்டால்** பாக்கியவான்கள் ..... ஆவியானவர் உங்களாலேயே மகிமைப்படுவார். 1பேது4:14. ஒரு வேளை மற்றவர்கள் உன்னைப்பற்றி புரளி பேசியதால் அல்லது உன்னைப்பற்றி அவமானப்படும் படி எழுதிவிட்டதால்தான் **உன் ஊழியம் நின்றுவிட்டது** என்று சொல்லாதே. உன் ஊழியம் கர்த்தரின் சித்தப்படி அல்லது அழைப்பின்படி அல்லது வசனத்தின்படி தான்

நடக்கிறதேயானால் **அதை யாராலும்** அல்லது **எந்த சக்தியாலும் தடை பண்ணமுடியாது.** ஆகவே பயப்படாதே உன் ஊழியம் நிச்சயம் தொடரும்.

உன்னை யாரோடாவது தொடர்புப்படுத்தி பொய்யாய் நீ அவமானப்படுத்தப்படுவாயே யானால் உன் மனசாட்சியின் படி அந்த குற்றச்சாட்டை **அலட்சியப்படுத்திவிடு.** அதை நினைத்து கவலைப்படாதே. **உன் தனி ஜெபத்தில்** குற்ற உயர்ச்சி இல்லாமல் **கர்த்தரின் முன் நீ நிற்பதை வைத்தும் உன் மனசாட்சி உருத்தாததின்** நிமித்தம் உன் நிராபராதித்துவத்தை **நீயே உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.** அதே சமயம் யாரோடு உன்னை தொடர்புபடுத்தி இழிவாகப் பேசப்பட்டதோ அந்த நபரை சந்திப்பதையும் பழகுவதையும் நிறுத்து. இந்த விஷயத்தில் குற்றச்சாட்டு பொய்யானதாக இருந்தாலும் தொடர்பை நிறுத்திவிடு.சிலர் நினைக்கிறார்கள் தொடர்பை உடனே நிறுத்திவிட்டால் நம் மேல் உள்ள சந்தேகம் உறுதியாகிவிடும் என்றும் நினைக்கிறார்கள். இந்த எண்ணம் மிகத்தவறு.

- ☐ உன்னைக்குறித்து கடைசியாக ஒரு ஆலோசனை. இப்போது எனக்கு ஒரு கதை ஞாபகம் வருகிறது. ஒரு ராஜாவுக்கு கெட்டுப்போன ஒரு மகன் இருந்தான். கெட்ட நண்பர்களுடன் இணைந்து தன் வாழ்க்கையை கெடுத்துக் கொண்டிருந்தான்.

ஒரு நாள் தகப்பனாகிய ராஜா மகனைப்பற்றி மனக்கவலை காரணமாக படுத்தபடுக்கையாகிவிட்டார். இன்னும் சில நாளில் மரித்துவிடுவார் என்று வைத்தியர்கள் கூறிவிட்டனர்.இப்போது மகனுக்குள் ஒரு பயம் உண்டாகிவிட்டது. தான் கெட்டுப்போன மகனாகிவிட்டதால் அரசாட்சியை தன் அப்பா தனக்கு கொடுக்காமல் மந்திரியிடம் ஒப்புவித்துவிட்டால் தன்னை தன் மந்திரி பிரதானிகளே என்றாவது ஒரு நாள்அரண்மனையைவிட்டே வெளியேற்றி விடுவார்களேயென்று பயந்து கொண்டிருந்தான்.

ஒருநாள் ராஜா திடீரென்று ராஜா பிரதானிகளை கூட்டி தன் மகனை ராஜாவாக பிரகடனம் செய்துவிட்டான். எதிர்பாராத இந்த சந்தோஷமான மாற்றம் கண்ட மகன் இத்தனை உயர்ந்த பதவி வந்தடைந்தவுடன் தன் உயர்ந்த பொறுப்பின் காரணமாக தன் பாவத்தை, தவறுகளை, உணர்ந்து தன்னை திருத்திக்கொண்டான் நல்லவனாக மாறினான்.

ராஜாவின் மரண நேரம் வந்தது. மகன் ராஜாவிடம் சென்று அப்பா கடைசியாக எனக்கு ஏதாவது கூறுங்கள் என்று கேட்டான்.

ராஜா ஒரே வார்த்தையில் பதில் கூறி உயிர்விட்டார். அவர் கூறியது இதுதான்.**மகனே நீ ஒரு நல்ல ராஜாவின் மகன்** என்பதை மட்டும் எப்போதும் மறக்காமல் ஞாபகப்படுத்திக்கொண்டேயிரு என்பதே. பழைய கெட்ட நண்பர்களை சந்திக்க மறுபடியும் உன் மனம் விரும்பும்போது **நான் சாதாரனமானவன் அல்ல** , நான் **ஒரு ராஜாவின் மகன்** என்ற எண்ணம் வரவேண்டும். உடனே பாவ எண்ணத்தை மாற்றிக்கொள்ளலாம்.

தான் **ஒரு ராஜாவின் மகன்** என்ற அந்த வார்த்தையும் அந்த எண்ணமும் அவனை பெரிதும் மாற்றிவிட்டது. இதை வாசிக்கும் அன்பானவர்களே உங்களை குறித்தும் இப்படியே சிந்தித்துக் கொண்டிருங்கள். ஆம் **நீ இயேசு ராஜாவின் மகன்** உன் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல. **உன் நோக்கம்** மேலான நோக்கமாக, பரலோக ராஜ்யத்தை குறித்ததாக இருக்க வேண்டும். நீ செல்லும் இடம், பழகும் விதம் யாவும் மாறும் தேவையற்ற பேச்சுக்கள் பேசும் நிலை உனக்கு வந்தால் இப்படிப்பட்ட சூழ்நிலையிலெல்லாம் **நீ ஒரு ராஜாவின் மகன்** என அடிக்கடி நினைவு கூர்ந்தால் போதும் **பழைய சுபாவம்** தவறான **நண்பர்களின் தொடர்பு** எல்லாம் மாறும்.ஒரு ஓட்டப்பந்தயத்தில் ஓடிய ஒருவன் மற்றவர்களைவிட முதலாவதாக வந்தான் என்றாலும் நடுவர் அவனை தோற்று விட்டதாக அறிவித்தார். காரணம், அவன் ஓடிக்கொண்டிருக்கையில் பந்தய இலக்கை நெருங்கும் சமயம் தனக்கு நியமிக்கப்பட்ட **ஓடுபாதையிலிருந்து கொஞ்கம் விலகிவிட்டான்.** அவ்வளவே அதனால் அவன் தோற்றுவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

அப்படியே இயேசு கிறிஸ்துவை **அறிவிக்கமுடியாத** ஆவிக்குரிய சம்பந்தமில்லாத **சமூக பணிகளில் மட்டும்** நீ அதிக கவனம் செலுத்தும்போது சமூக பணியும் ஊழியம்தானே என்று இயேசு சொன்னார், என்று நீயாக **கற்பனை செய்துகொண்டு** சமூக பணிகளில் தீவிர கவனம் செலுத்தினால் **ஊழிய அழைப்பை பெற்ற** நீ உன் வாழ்க்கை ஓட்டத்தில் எத்தனை வேகமாக ஓடினாலும் நீ தோற்றவன்தான். இத்தனை தூரம் கஷ்டப்பட்டு ஓடிவந்தும் பிரயோஜனம் இல்லாமல் போவது எத்தனை துரதிஷ்டம்.

கர்த்தாவே **இயேசுவின் நாமத்தில்** தானே நான் ஊழியம் செய்து **தீர்க்க தரிசனம்** உரைத்தேன் **பிசாசுகளை துரத்தினேன். அற்புதங்களை** செய்தேன் என்பாய் அப்போது இயேசுவோ **உன்னை எனக்கு தெரியாது** அக்கிரம செய்கைகாரரே **என்னைவிட்டு அகன்று போங்கள்** என்பார். அதாவது **வசனத்தின்படி ஊழியம்** செய்யாமல், சிரமமல்லாத வழியில் உன் இஷ்டப்படி **ஊழியம் செய்ததால்** அக்கிரம் செய்கைகாரரே என்று உன்னை ஏசி புறம் தள்ளுவார் நீ எவ்வளவு **பிரசித்திபெற்ற ஊழியனாக** உலகத்தில் பேசப்பட்டாலும் **பரலோக பாக்கியத்தை** இழந்து போய்வாய். மத் 7:22,23. ஆகையால் உன்னைப்பற்றி அடிக்கடி ஆராய்ந்து சரிப்படுத்திக்கொள்.

- ☐ உலக பிரசித்த பெற்ற ஊழியரும், **10 லட்சத்துக்கும் அதிகமான** சபை அங்கத்தினர்களை பெற்ற சபையின் பாஸ்டர் **பால்யாங்சிசோ** அவர்கள் சபை காணிக்கைகளை **ஷேர் மார்கெட்டில்** போட்டு **பெரும் பணம் சேர்த்தார்.** சபை மக்கள் அதைக் கண்டு பிடித்துவிட்டனர். போலீஸ்லில் புகார் கொடுக்கப்பட்டது **.சபை மக்களோடோ, சபை கமிட்டியுடனோ, உடன் பாஸ்டர்கள் யாருடனும்** கேட்காமல் காணிக்கையில் இவ்வளவு பெரிய **ஊழல் செய்து விட்டார்**.ஜெயிலில் **அடைக்கப்பட்டார்.** இப்போது விடுதலையாக்கப்பட்டார். **ஷேர் மார்கெட்டின்** காணிக்கை **லாபம்** அனைத்தும் **எனக்காக அல்ல** சபைக்காக தான் சேர்த்தேன். அது மற்ற ஏழை சபைகளுக்கு உதவத்தானே கணிக்கையை ஷேர் மார்க்கெட்டில் போட்டேன் என்று தன் **பாவத்தை**

**நியாயப்படுத்தினார்**. இப்படிப்பட்டவர்கள் **கர்த்தருக்கே உதவி செய்பவர்கள்** ஆவோம் என்று யோசிக்கவில்லையே! கர்த்தர் தான் நமக்கு உதவி செய்ய வேண்டும் இதை பாஸ்டர் **பால்யாங்சிக்சோ** அவர்கள் யோசிக்கவில்லை.

**போலியான நண்பனாக இருப்பதை விட வெளிப்படையான எதிரியாக இருப்பது மேல்**
***– இங்கிலாந்து பழமொழி***

**மறைவான** சிநேகத்தை பார்க்கிலும் வெளிப்படையான **கடிந்து கொள்ளுதல் நல்லது** –
நீதி 27:5

**கடிந்து கொள்கிறவன்** முடிவில் **அங்கீகாரம் பெறுவான்** – நீதி 28:23

## இயேசு அழைக்கிறார்

இந்தியாவில் தமிழ்நாட்டில் **இயேசு அழைக்கிறார்** என்ற ஊழிய ஸ்தாபனம் யாவரும் ¶ ¤ Í >¼. Ö>[ ü >VÃï ì Ä¼ V. D.G.S. தினகரன் நல்ல ஊழியராக தான் இருந்தார் ஊழியத்தில் **வியாபார எண்ணம்** வந்தது. **காருண்யா** கல்லூரி, **பல்கலைக்கழகம்** தொடங்கினார். ஒரு மாணவனிடம் ஒரு சீட்டுக்கு **இத்தனை லட்சம்** என்று வாங்கினார். **கோடி கோடியாக** பணம் சேர்த்தார். **தேவ தண்டனை** வியாதியின் ரூபத்தில் வந்தது. **கிட்னி செயலற்று போனது.**அமெரிக்கா சென்று ஆப்பரேஷன் செய்து வேறு ஒரு நபரின் கிட்னி விலைக்கு வாங்கி பொருத்தினார்.ஆனால் அது இவர் உடலுக்கு ஒத்துழைக்கவில்லை. **இருதயம் இரண்டு முறை** ஆப்ரேஷன் செய்து கொண்டார் அதுவும் சரியாக இயங்கவில்லை.

**காருண்யா கல்லூரி** தொடங்கியவுடன் **பெரிய கார்** விபத்தில் தன் **ஒரே மகளை சாக கொடுத்தார்.** சகோ. தினகரனுக்கு புத்தி வரவில்லை. அதன்பின்தான் **வியாதிகள்** ஒன்றன் பின் ஒன்றாக வந்தது.அவர் மரித்து போனார்.இப்போது மகன் **பால் தினகரன்** அவர்கள் கல்லூரியையும், இயேசு அழைக்கிறார் **நிர்வாகத்தையும்** பொருப்பெடுத்து கொண்டார். **கோடி கோடியாக** சம்பாதித்த பணத்தை வங்கியிலும் **போடமுடியாமல்** காருண்ய கல்லூரி **கெஸ்ட் ஹவுஸ்லில்** சுமார் **129 கோடி ருபாய்களை** பதுக்கி வைத்ததையும் **மக்கள் கொடுத்த காணிக்கைகளை தங்க கட்டிகளாக** பதுக்கி வைக்கப்பட்டதையும் **அமலாக்க துறையினரும்,** லஞ்ஜ ஒழிப்பு அதிகாரிகளும் கண்டு பிடித்து விசாரனைக்கு அழைத்து விசாரனை நடந்தது. இப்போதும் விசாரனை நடந்துகொண்டு இருக்கிறது. உலகம் முழுவதும் ஊழல் விபரம் பரவியது. **இயேசு அழைக்கிறார்** கூட்டங்களை இப்போது யாரும் எங்கும் நடத்த அழைப்பதில்லை.

**பண ஆசை எல்லா தீமைக்கும் வேறாக இருக்கிறது 1தீமோ 6:10.**

# CRITICISM

# குற்றசாட்டு – புரளிபேசுதல்

இப்படிப்பட்ட சூழ்நிலையயில் மூத்த மகள் வீட்டைவிட்டு வெளியேறினார். ஒரு நாள் பெண்கள் ஐக்கிய கூட்டம் ஒன்றில் **பால் தினகரனின்** மனைவி **Mrs. ஏஞ்ஜலின்** அவர்கள் பேசும்போது எங்களை எல்லாரும் **பணக்கார ஊழியர்கள்** என்று கூறுகிறார்கள். உண்மையில் எங்களிடம் **ஒரு பைசா கூட இல்லை** யாருக்காவது சந்தேகம் இருந்தால் எங்கள் வீட்டுக்கு வந்து பாருங்கள் எங்கள் **வங்கி பாஸ் புக்கை** பாருங்கள். அதில் **0 பேலன்ஸ்ஸாக** இருப்பதை காணலாம் என்றார்கள்.

அப்படியே நாங்கள் கனடா நாட்டுக்கு போனோம் அங்கு எங்களை யாரும் அழைக்க விமான நிலையம் வரவில்லை. விமான நிலையத்திலிருந்து **டாக்சியில்** கனடா தலைநகர் வந்து சேர்ந்தோம்.காரை விட்டு இறங்கிய உடன் **எங்கு போவது** என்று தெரியாம **நடுவீதியில் பசியுடன் நின்றோம்** வாடகைக்கு வீடு தேடவேண்டும். முதலில் ஓட்டலில் தங்குவோம் என்று ஒரு ஓட்டலில் சுமார் சில நாட்கள் தங்கினோம். வாடகை வீட்டை கண்டு பிடிக்க **டாக்சியில்** செல்வது **மிகப்பெரிய செலவு.** அன்று இரவு நான் தூங்கி கொண்டிருந்தேன். அப்போது **இரண்டு தூதர்கள்** என்னை தட்டி **ஏஞ்ஜல் சீக்கிரம் எழுந்திரு.** உடனே எழுந்தேன். உனக்கு **கார் ஒன்று வேண்டும்** என்றாய் அல்லவா **என்ன கம்பெனி கார், என்ன கலர்** கார் வேண்டும், **சீக்கிரம் சொல்** என்று என்னை துரிதப்படுத்தினார்கள். உடனே நான் படிகட்டில் கீழே இறங்கி **அங்கு மேஜையில்** கார்களின் கம்பெனிகளின் **கேட்லாக்** இருந்தது. அதை கொண்டு வந்து ஒரு **குறிப்பிட்ட காரை** காண்பித்தேன். உடனே தூதர்கள் அதே கார் நாளை உனக்கு கிடைக்கும் என்று கூறி சென்று விட்டனர். என்ன ஆச்சர்யம் மறுநாள் என் கணவர் என்னிடம் புறப்படு நாம் **புது கார்களின்** கம்பெனிக்கு போவோம் என்றார். எனக்கு ஆச்சரியம் தாங்கமுடியவில்லலை. **என்ன கலர், கம்பெனி** படத்தை தூதர்களிடம் காண்பித்தேனோ **அதே கார்** அதே **கலர்** அதே **கம்பெனி** காரை வாங்கினோம். கர்த்தர் எவ்வளவு å_éki ÃVò º ï^ Ö©Ã½R ½R¸KD **இயேசு அழைக்கிறார் FAMILY CHANNEL** சேனலிலும் கூறினார்கள்.

**பொய்களால் நிறைந்த சாட்சி** இதில் கேள்விகள் நிறைய உண்டு. 2024 ஆகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் என்னிடம் இவர்களின் **இயேசு அழைக்கிறார் சிறப்பு நிகழ்சி** என்று கூறி வீடியோ நிகழ்ச்சி காண்பித்தார்கள்.





அதில் சகோ. தினகரனின் மனைவியை தவிர மற்ற **குடும்பத்தினர் அனைவரும்** அறைவட்டமாக அமர்ந்து கொண்டார்கள். முதலவதாக பால் தினகரனின் மகன் **Sam பால்**, அவர் மனைவி,குழந்தை அடுத்து Dr. பால்தினகரன் அருகில் Mrs.ஏஞ்ஜலின் அவர் மனைவி அவருக்கு அருகில் **மூன்றாவது மகள்** புதிதாக திருமணமானவர் அருகில் அவர் கணவன் புதுமாப்பிள்ளை. இப்போது **பால் தினகரனின் மகன்** பேசினார். நாங்கள் இங்கு முழு குடும்பமாக உங்கள் முன் வீடியோ முன் அமர்ந்திருக்கிறோம்.

இன்றைய கூடுதலின் தலைப்பு **CRITICISM** புரளிகள் உங்கள் எல்லாருக்கும் எங்களைப் பற்றிய மற்றவர்கள் செய்த **CRITICISM** அறிந்திருப்பீர்கள் அதை பற்றி இந்த நிகழ்ச்சியில் நாங்கள் எங்களுக்குள்ளே **வெளிப்படையாக பேசி** புரளிகளுக்கு பதில் அளிக்க போகிறோம். இப்படி கூறியவுடன் கடைசி **மகளின் கணவர்** புதுமாப்பிள்ளை திடிரென்று பேசினார். **கிரிட்டிசிசம் புரளிகள்** யாவும் **மாமா பால் தினகரன்**, அத்தை **ஏஞ்ஜலினைப்பற்றி தான்** இபபோது எல்லாரும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். **முதலில் அதை பற்றி பேசுவோம்** என்று மிகவும் துணிந்து வெளிப்படையாக **ஏஞ்ஜலின் பெயரையே குறிப்பிட்டு புரளிகள்** யாவும் இவர்களை **பற்றிதான் பேசப்படுகிறது.** முதலில் அதைப் பற்றி பேசுவோம் என்றார். அங்கிருந்த அத்தனை **பேர்களின் முகமும் மாறின.** மகன் **சாம்பால்** தான் அதை ஞானமாக பேசி சமாளித்தார். புரளிகள் கிரிட்டிசிசம் **நம் ஆண்டவர்** காலத்திலிருந்தே உண்டு. **ஊழியத்தில் இதையெல்லாம்** நாம் பலவருடங்களாக சந்தித்தோம். **நம் தாத்தா D.G.S. தினகரனைப்** பற்றி எவ்வளவு புரளிகள் அதையெல்லாம் தாத்தா தன் ஜெப வல்லமையால் மேற்கொண்டார். அது போல தான் **நம்மை பற்றியும் புரளிகள் வருகிறது.** இயேசு தன் மேல் **வந்த குற்ற சாட்டுகளை** எப்படி சமாளித்தாரோ அதைப்போல நாமும் சமாளிக்கிறோம் என்று கூறி **தொடர்ந்து சந்திப்போம்** என்று கூறி எந்த குற்றச்சாட்டையும் பற்றி கூறாமல் **பட்டும் படாமல்** பேசினார். இதையே தான் **ஏஞ்ஜலும், பால் தினகரனும்,** மகளும், மருமகளும் பேசினார்கள். ஆனால் ஒருவராவது தங்கள் மேல் வந்த குற்றச்சாட்டு என்ன? அதற்கு பதில் என்ன ? என்பதைப்பற்றி பேசவே இல்லை.

1. **வங்கியில்** O பேலன்ஸ் தான் உண்டு. **வீட்டில் பணமே இல்லை** இப்படிப்பட்ட எங்களை **பணக்கார ஊழியர்** என்றார்களே! அதன் உண்மை என்ன? அதைக் குறித்து Mrs.**ஏஞ்ஜலின் ஒன்றுமே** கூறவில்லையே ஏன் ?

2. **கனடாவுக்கு** போகும்போது **டாக்சிக்குக்கூட** பணம் இல்லை என்று ஒரு **புளுகு புளுகினாரே** அதைப்பற்றி பக்கத்தில் உள்ள **கணவர் பால் தினகரன்** ஒரு வார்த்தை கூட விளக்கம் கொடுக்கவில்லலையே . எப்படி **கனடாவில்** புதுகார் **வாங்க முடிந்தது.** அவர்கள் தங்கின **ஸ்டார் ஓட்டலுக்கு** எத்தனை **லட்சம் டாலர்கள்** சுமார் 10 நாட்களுக்கு வாடகையாக கொடுத்திருக்க வேண்டும்.கனடாவிலேயே **ஒரு ஜெப கோபுரம் உண்டே!** அதை **பராமரிக்க ஆட்கள்** உண்டே அவர்களை யாரையும் விமான நிலையத்திற்கு ஏன் வரசொல்லவில்லை.

3. **பெத்லகேமில்** இவர்கள் கட்டியுள்ள 27 நிலை அடுக்கு **கட்டிடத்தின் வாடகை பணம்** எங்கே? அந்த **பலமாடி கட்டிடத்தில் உள்ள ரெஸ்டாரண்ட் ஓட்டல், டூரிஸ்ட் தங்கும் அறைகளின் எண்ணிக்கை** எத்தனை? **அத்தனை அறைகளின் வாடகைகள் எங்கே?**

4. அமெரிக்காவில் **ஒரு தீவையே** ஒரு அரண்மனை போன்ற வீட்டோடு பால் தினகரன் வாங்கியுள்ளதாக **கூகுள் மேப் காட்டுகிறதே!** இதற்கு பணம் எங்கிருந்து வந்தது . இன்னும் பல நாடுகளில் **சிங்கப்பூர்,** மலேசியா, **அரேபியா, கனடா, அமெரிக்கா, எருசலேம்** இன்னும் சில நாடுகளில் தொடங்கியிருக்கும் **ஜெப கோபுரம்** என்ற பெயரில் நடக்கும் கூடுகைகளில் கிடைக்கும் **வாடகை பணம்,** காணிக்கை **பணம் எங்கே போனது?** இந்த கேள்விகளுக்கு ¶ | Ý> Family சேனலில் கூடும் கூடுகையில் **பதில் சொன்னால்** வசகர்களுக்கும் – மற்றவர்களுக்கும் **பிரயோஜனமாக** இருக்கும். சொல்வார்களா?

5) **மருமகன்** கொஞ்சம் **தைரியம் உள்ளவர் போல** தோன்றகிறது, ஆகவே அவர் **Mrs.ஏஞ்ஜலின் பால் தினகரன்** அவர்களோடு அத்தை எங்கள் **வங்கி கணக்கில்** ஒரு பைசாகூட **இல்லை என்கிறீர்களே,** மொத்தம் **4 வங்கிகளில்** உங்களுக்கு **பண வரவு உண்டே,** அந்த **வங்கிகளில்** உங்கள் **பேலன்ஸ்** எவ்வளவு? எப்படி (Aunty) ஆண்டி **கூச்சம் இல்லாமல்** நீங்கள் ஒரு **ஏழை என்றும்** பணமே **இல்லாதவர்** என்றும் **மக்களை நம்ப வைக்க** அந்த நாடகம் ஆடினீர்கள். இதில் உங்களுக்கு **அழுகை எப்படி வந்தது.** உங்கள் **மனசாட்சி குத்தவில்லையா?**

அத்தை ! உண்மையில் **எங்களால் வெளியே தலைகாட்ட முடியவில்லை**. பார்பவர்கள், **என் கல்லூரி நண்பர்கள்** யாவரும் இவைகளைப் பற்றியே **கேள்விகள் கேட்டு** என்னை **அவமானப்படுத்திவிட்டார்கள்.** இந்த குடும்ப **கூடுகையிலாவது** அடுத்த முறை TV நிகழ்ச்சியிலாவது **பதில் கூறுங்கள்.** நீங்கள் பதில் கொடுக்க முடியாது என்று எனக்கு தெரியும். **கிறிஸ்தவ சாட்சியை** காத்துக்கொள்ளவாவது உங்கள் பொய் **தகவலுக்கு மன்னிப்பு** கேட்டுக்கொள்ளுங்கள்.

**கனடா** நிகழ்ச்சியில் ஏராளமான **பொய்பேசிவிட்டேன்,** தூதர்கள் **இரவில் என்னை தொட்டு எழுப்பினார்,** நான் விரும்பியபடி **அதே** கலர், **அதே** கம்பெனி கார் கிடைத்தது. இதைக்குறத்து விளக்கம் கூறுங்கள். **டாக்சிக்கு கொடுக்க காசில்லை** என்ற உங்கள் பக்கத்தில் உங்கள் கோடீஸ்வர கணவர் இருந்தாரே! அவரிடம் உலகம் முழுவதிலும் உள்ள **வங்கிகளில்** பணம் வரவு வைத்திருக்கும் பல நாட்டு ATM கார்டுகளை வைத்திருந்தவரை பக்கத்தில் வைத்துக்கொண்டு இந்த **பஞ்சப்பாட்டு** பாடிய **பொய்களுக்கு** எல்லாம் சேர்த்து **நீங்களும்,** உங்கள் **கணவரும்** கண்டிப்பாக மக்களிடம் **மன்னிப்பு கேளுங்கள்.** கிறிஸ்தவர்கள் யாவரும் **முட்டாள்கள்** என்று எண்ணிவிடாதீர்கள். நீங்கள் **மன்னிப்பு** கேட்டால்தான் **நானும் என் மனைவியும்** என் மச்சான் **சாம் அவர்களும் ஊழியம் செய்ய முடியும்** என்று கேட்டு **கர்த்தரை** சந்தோஷப்படுத்துங்கள்.

**உன்னைப்பற்றி** என்ற தலைப்பில் எழுதிய விஷயம் இப்போதைக்கு முடிவு பெற்றது.

# ...என்னைப் பற்றி

Dr. புஷ்பராஜ் ஆகிய என்னைப்பற்றி நான் அதிகம் சொல்லிக்கொள்ள விரும்பவில்லை.ஒன்றை அறிந்துக்கொள்ளுங்கள் . **நானும் சாதாரண மனிதன் தான்.** விசுவாச ஜீவியத்திலும் பரிசுத்தத்திலும், பக்தியிலும் **மற்றவர்களைவிட உயர்ந்தவன் அல்ல.**

நான் **அறிவில்** குறைந்தவன். **நான் அறியாதது** ஏராளம். நான் **உணராதது** நிரம்ப உண்டு. பல சமயங்களில் நான் இத்தனை **முட்டாளாக நடந்து கொண்டிருக்கிறேனே** என்று எனக்குள் நானே சலித்துக்கொள்வது உண்டு.

தெரு நாய் போல ஒரு காலத்தில் (இந்தியாவில்) (தமிழ்நாட்டில்) **சேலம்** வீதிகளில் சுற்றிக்கொண்டிருந்த என்னை என் **வீட்டாராலும்** என் **உறவினராலும், நண்பர்களாலும்** வெறுக்கப்பட்டவன்.

**என் இயேசு** கிறிஸ்து 1964 ம் வருடத்தில் ஒரு நாள் என்னை சந்தித்தார். **என்னை மனம் திரும்ப வைத்தார் அதன் பின் தான் என் வாழ்க்கை நிலையை** உயர்த்தினார், **ஊழியம் கொடுத்தார்.** இப்போது (2024) என் வயது 84 முடிய போகிறது என்றாலும் ஊழியத்தில் என்னை தொடர்ந்து **உபயோகித்துகொண்டும்** தொடர்ந்து **நடத்தியும்** வருகிறார்!.இது கிருபையே அன்றி வேறில்லை!

**என் ஊழியம்** வளர்ந்தது, விரிவடைந்து, உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் **பிரசித்தமானேன். வானொலி** மூலம் உலகத்துக்கு அறிமுகமானேன். அப்படியே எல்லா உலக நாடுகளில் ஊர்களிலும் **கிராமங்களிலும்** உபயோகப்படுத்தப்பட்டேன். கர்த்தர் **ஆங்காங்கு** எனக்காக **ஜெபிக்கும்** எனக்கு **காணிக்கைகளை** அனுப்பி **என் ஊழியத்தை** தாங்கும் உள்ளங்களைத் தந்தார். என் மூலம் நடக்கும் ஊழிய விவரங்களை நான் அவர்களுக்கு **எழுதும் கடிதம் மூலம்** அறிந்து என் ஜாமக்காரன் பத்திரிக்கை வாசித்து என்னை நேசிப்பவர்கள் எனக்காக **தொடர்ந்து ஜெபிக்கிறார்கள்.** நாளாக நாளாக அப்படிப்பட்ட விசுவாசிகளின் எண்ணிக்கை பெறுகினதால் தான் 1969 -ல் **NEWS LETTER** கடிதமும் – செய்தியும் என்ற பெயரில் பத்திரிக்கை ஆரம்பித்து அந்த **பத்திரிக்கை** மூலம் விசுவாசிகளின் தொடர்பில் **ஒரு நெருக்கத்தை** உண்டாக்கிக் கொண்டேன்.அதன்பின் அரசாங்க அதிகாரம் பெற்ற பத்திரிக்கையாக மாற்றி கர்த்தரே வைத்த பெயரான **ஜாமக்காரன்** தமிழில் **(ஜாமக்காரன்),** மலையாளத்தில் **காவல்காரன்,** ஆங்கிலத்தில் **(WATCHMAN)** என்ற பெயரில் பத்திரிக்கை வெளிவந்தது.

☐ 1969 ம் வருடம் நான் அம்மை வியாதியால் (SMALL POX) பாதிக்கப்பட்டு இருந்தபோது என் வியாதியின் கோரத்தை **முகம் பார்க்கும்** கண்ணாடியில் கண்ட போது கலங்கினேன். அப்போது பகல் 11 மணிக்கு கர்த்தரிடம் கர்த்தாவே இந்த வியாதி எனக்கு **தண்டனையாக** கொடுக்கப்பட்டதா?

அல்லது விசுவாசத்தில் **என்னை பெலப்படுத்த** நீர் அனுமதித்தா? காரணம் என்ன என்று கேட்டு அழுது ஜெபித்தேன். அப்போது இயேசு கிறிஸ்து என் அறையில் எனக்குமுன் வந்து நின்றார் என்று உணர்ந்தேன். அவர் **ஆவியில்** இருந்தாரோ **சரீரத்தில்** இருந்தாரோ அறியேன். அப்போது அவர் என்னிடம் கூறுயது, உன்னை **வித்தியாசமாக** உபயோகிக்கப்போகிறேன். அதற்கு **உன்னை எனக்கு விட்டுக்கொடுப்பாயா?** என்றார். **என்னை எப்படிவேண்டுமானாலும் உபயோகித்துக்கொள்ளும்** என்று கூறி என்னை **பூரணமாக சமர்ப்பித்தேன்.** அதன்பின் தான் என் **பத்திரிகைக்கு** ஜாமக்காரன் என்ற பெயரை வைக்க ஆண்டவர் **வசனத்தின் மூலம்** காட்டினார்.

இப்போது ஜாமக்காரன் என்ற **புது பெயரோடு** பத்திரிக்கை வெளிவந்தது அதோடு கூடவே **புது பிரச்சனைகளும்** உருவாக ஆரம்பித்தது. **வேத வசனங்களை** அறிவிக்கும் பணியோடு என் வாசகர்களை **எச்சரிக்கும் பணியும்** தொடங்கியது. இதனால் வரும் வெருப்புகளை ஏச்சுக்களை, **எதிர்ப்புகளை கர்த்தரிடம்** கூறி பல முறை முறையிட்டிருக்கிறேன். அப்போது இதுதான் நான் அன்று நான் உன்னை **வித்தயாசமாக உபயோகிக்கப்போகிறேன்** என்று கூறியதின் அர்த்தம் ஆகும் என்றார். இதற்கென்றே உன் பத்திரிக்கைக்கு **ஜாமக்காரன்** என்ற **புதுப்பெயர்** கொடுத்தேன். அந்த பெயருக்கேற்றப்படி பத்திரிக்கையை நடத்து என்றார்.

உன் ஊழியத்தின் ஒரு பகுதியாக இந்தப்பத்திரிக்கைப் பணியை **ஜாமக்காரன் பெயரில்** ஒரு **குறிப்பிட்ட காலம்** வரை இயங்கச்செய்வேன் . முதலாவது **வெளி ஊர்களில்** அல்லது **வெளிநாடுகளில் பிரசங்கிக்கும் ஊழியம்** தானே நின்று போகும் , அதன் பின் **பத்திரிக்கை ஊழியமும்** நின்று போகும். ஆனாலும் **வேரு விதத்தில்** உன்னை ஊழியத்தல் பயன்படுத்தவேன் என்றார்.

**ஜாமக்காரன்** பெயரில் என் பத்திரிக்கை வெளிவந்த **சில மாதங்களிலேயே** நான் நேசித்த இப்போதும் நான் நேசிக்கும் என் சினேகித ஊழியரான **சகோ. தினகரன்** அவர்களே என் முதல் தாக்குதலுக்கு உள்ளானார்.

இது எனக்கு **மிகவும் சங்கடமும்** மன வேதனையுமானது. **ஆரம்ப காலத்தில்** அவரைப் பற்றி **பயந்து பயந்து** எழுதிய நான் அதன்பிறகு **மிக வெளிப்படையாக** எழுதினேன். அவர் பாதை **தவறான வழியில் மாறியதை** மிக தெளிவாக அறிந்தவுடன் **ஆவியானவரும்** என்னை மிக அதிகமாக **அவரைப்பற்றி எழுதும்படி** உந்தித்தள்ள, தைரியமாக,வெளிப்படையாக அவரைப்பற்றி எழுதி **என் வாசகர்களை** எச்சரிக்க வேண்டியதாயிற்று.

அப்போதே மற்றவர்கள் என்னைப்பற்றி கூறும்போது இவருக்கு எல்லா **ஊழியக்காரர்களையும் குறைக்கூறி எழுதுவதே வேலை** என்றார்கள். ஆனால் அந்த குறிப்பிட்ட **சகோதரனைத்தவிர** அதன்பின் சில காலம் வேறு யாரையும் வெளிப்படையாக எழுதவில்லை என்றாலும் மேலே மற்றவர்கள் கூறிய **குற்றச்சாட்டு** உறுதியானது.

சில காலம் கழித்துதான் மற்றொரு **பெரிய ஊழியனைக் குறித்து** எழுதினேன். ஜெபத்தில் **பெயர்அழைப்பதை குறித்து** எழுதினேன்.**ஜெபத்தில் அவர் பெயர் குறிப்பிடும்** பெரிய **மாய்மாலத்தைப்பற்றி** எழுத நேர்ந்தது.

பிரசித்தப்பெற்ற **இவர்களைப் போன்ற ஊழியர்களைப் பற்றியெல்லாம்** பகிரங்கமாக அவர்கள் தவறுகளை சுட்டிகாட்டி நான் எழுதப்போக **தமிழ்** நாட்டிலும், **கேரளாவிலும்** ஏராளமான வாசகர்கள் **பல பெரிய ஊழியர்களின்** ரகசிய நடவடிக்கைகளையும், **தவறுகளையும், பொய்யான ஊழியத்தையும் மாய்மால** ஜெபத்தையும்,**மாய்மால** கண்ணீரையும், **பொய்யான வெளிகிரியைகளைப்** பற்றியும், மறைமுகமாகவும் **வெளிப்படையாகவும் ஆதாரத்தோடும்** எனக்கு கடிதங்கள் எழுதி அனுப்பி அந்த தவறு செய்யும் ஊழியர்களைப்பற்றி **ஜாமக்காரனில்** எழுதி பகிரங்கமப்படுத்தச் சொன்னார்கள். அப்படி விவரங்களை எழுதிய அனுப்பிய **பெரும்பாலானவர்கள்** அவர்கள் எழுத சொல்லி குறிப்பிட்ட அந்த குறிப்பிட்ட ஊழியர்களின் மேல் அவர்களுக்குள்ள தனிப்பட்ட பகை அல்லது **விரோதத்தால்** அப்படி எனக்கு எழுதினார்கள் என்பது கடிதத்தை நான் படிக்கும் போதே விளங்கியது!அப்படி எனக்கு வந்த பெரும்பாலான கடிதங்கள் விலாசம் இல்லாத மொட்டை கடிதங்களாகத்தான் இருந்தது. ஆகவே **பகையின்** அடிப்படையில் அவர்கள் குறிப்பிட்ட ஊழியர்களைப்பற்றிதான் எழுதவில்லை.

**கவனியுங்கள்**

மற்ற **ஊழியர்களின் தவறுகளை**, சுட்டிக்காட்டி என் பத்திரிக்கையில் எழுதுவது **என் ஊழியம் அல்ல.** அதற்காக நான் ஜாமக்காரன் பத்திரிக்கையை **நடத்தவில்லை** என்பதையும் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். குறிப்பிட்ட ஊழியர்களைப்பற்றி புகார் கடிதங்களில் முழு விலாசத்துடன் வந்த கடிதத்தை அப்படியே போட்டோ காப்பி எடுத்து உங்களைப்பற்றி இப்படி ஒரு கடிதம் வந்திருக்கிறது என்று குறிப்பிட்டு **அந்தந்த ஊழியர்களுக்கே ரிஜிஸ்டர் தபால்** மூலம் அனுப்பிவிடுவேன். சிலர் அப்படி தான் **அனுப்பிய கடிதங்களுக்கு நல்ல விளக்கமும்** அந்த கடிதத்தில் குறிப்பிட்ட தவறுகளை தாங்கள் செய்யவில்லை என்பதை தெளிவாகவும் பதில் கடிதம் மூலம் எனக்க எழுதியுள்ளார்கள். அப்படி சிலர் எழுதிய விளக்கம் ஏற்றுக் கொள்ள கூடியதாகவும் **நம்பும் படியும்** இருந்தது. சிலருடைய விளக்கம் **பொய்** என்றும் விளங்கியது.

**நாகர்கோவில்**, பாளையங்கோட்டை, சென்னை(அண்ணா நகர்) சென்னையில் மற்றொரு பகுதி, **நாலுமாவடி**, பாண்டிச்சேரி, **கோயமுத்தூர்**, கேரளா ஆகிய பகுதிகளில் இருந்து கொண்டு **சொந்தமாக பத்திரிக்கை நடத்தும் ஊழியர்கள்** பலருக்கு **அவரவர்களைப் பற்றிய விமர்சன கடிதங்களை** அனுப்பினேன். சிலருக்கு இன்னும் அனுப்பவில்லை. இந்த கடிதங்களை அவர்களுக்கு அனுப்புவது அவர்களை Blackmail செய்வதற்கல்ல. அவர்கள் எழுதியதில் உண்மை இருக்குமானால் நான் அனுப்பிய தகவல்கள் அவர்கள் தங்களை **சரிப்படுத்திக்கொள்ள உதவும்** என்ற நோக்கமே அல்லாமல் வேறல்ல. எந்த ஊழியன் எப்படி எப்படி ஊழியம் செய்தால் உங்களுக்கென்ன? அவர்கள் கணக்கை கர்த்தரிடம் ஒப்படைக்கும் போது அதன் பலனை அவர்கள்தானே அடைகிறார்கள். **அவர்கள் நின்றாலும், விழுந்தாலும் கர்த்தருக்கே கணக்கு கொடுக்கிறார்கள்.** இந்த குறிப்பிட்ட வசனங்கள் சுட்டிக்காட்டி யாரும் ஊழியர்கள் செய்யும் தவறுகளை சுட்டிகாட்டாதபடி சபை மக்களை பயமுறுத்தி வைக்கிறார்.

மேலே நீங்கள் வாசித்தப்படி **குற்றச்சாட்டுகளுக்குரிய** குறிப்பிட்ட ஊழியர்களின் நடவடிக்கைகள், ஏமாற்றுகள், **ஜாமக்காரனின் வாசகர்களை** பாதிக்குமானால் என் வாசகர்கள் இவர்களின் மாய்மால **ஊழியத்தில் வஞ்சிக்கப்படுகிறார்கள்** என்று நான் அறிந்தால் மட்டுமே, **என் வாசகர்களை எச்சரிக்க வேண்டி** எழுதியவர்களின் பெயர் குறிப்பிடாமல் இவர்கள் நடப்பிக்கும் தவறான **கிரியைகளை அல்லது பிழையான உபதேசத்தை** மட்டும் வாசகர்களுக்கு அடையாளம் காட்டுகிறேன். ஜாமக்காரன் வாசகர்களாகிய எங்கள் வாசகர் குடும்பத்துக்கு நான் எழுதும் கடிதம் தான் **ஜாமக்காரன்** என்று பத்திரிக்கை ரூபத்தில் அவர்களை சென்றடைகிறது. இக்கடிதம் **மற்றவர்கள் படிக்க அல்ல**, பிழையான ஊழியம் செய்யும் பலரை குறித்து எழுதி **என் வாசகர் குடும்பத்தை எச்சரிக்க** வேண்டியுள்ளது. அது **என் கடமை.**

அதை என்னால் தவிர்க்க முடியவில்லை. அப்படி நான் எழுதி எச்சரிக்காவிட்டால் கர்த்தரின் கோபத்துக்குள்ளாவேன். கர்த்தர் கூறுவதை கவனியுங்க. நீ **கேட்டதையும் அறிந்ததையும் தெரிவியாதிருந்தால்** தன் அக்கிரமத்தை சுமப்பான், லேவி 5:1 ஆகவே கர்த்தருக்கு பயந்து இந்த வித்தியாசமான பத்திரிகை ஊழியத்தை செய்கிறேன். இனி மேலும் சிலவற்றை விரைவில் வெளிப்படையாகக் ஜாமக்காரனில் எழுதுவேன் என்று நினைக்கிறேன்.

**இந்த கட்டுரையை** 1983 ம் வருடம் **ஜாமக்காரனில்** எழுதினேன்.

## இந்த விஷயத்தல் வேதத்தின் ஒழுங்கு

**ஒருவன் குற்றம் செய்தால்** அவனிடத்தில் போய் நீயும் அவனும் தனித்திருக்கையில் அவன் குற்றத்தை **அவனுக்கு உணர்த்து** அவன் உனக்கு செவி கொடுத்தால் உன் சகோதரனை ஆதாயப்படுத்திக்கொண்டாய் **அவன் செவி கொடுக்காமல** போனால் இரண்டு மூன்று **சாட்சிகளுடைய வாக்கினாலே சங்கதிகளெல்லாம் நிலைவரப்படும்படி** மறுபடியும் அதே நபரிடம் இரண்டோருவரை உன்னுடனே கூட்டிக்கொண்டுபோ அவர்களுக்கும் அவன் **செவி கொடாமல்போனால்** அதை **சபைக்கு** தெரியப்படுத்து **(பகிரங்கப்படுத்து)** சபைக்கும் செவி கொடாதிருப்பானானால் அவன் அஞ்ஞானியைப் போல் (முட்டளைப்போல்) இருப்பானாக. மத் 18:15-17,1 தீமோ 5:20.

மேலே **இயேசு கிறிஸ்து,** பவுல் ஆகியவர்கள் கூறிய **முறைப்படிதான்** பாவாம் அல்லது தவறு செய்த ஊழியனுக்கு அறிவித்தபின்தான் ஜாமக்காரனில எழுதுகிறேன். நான் எதைப்பற்றி அல்லது யாரைப்பற்றி **ஜாமக்காரனில்** எழுதியானலும் இந்த வேத ஒழுங்கை கடைப்பிடிக்கிறேன்.

# என்னைப்பற்றி

அப்படியே **என்னைப்பற்றி** என் **ஊழியத்தைப்** பற்றியும் **அதில் உள்ள தவறுகளை** குறைகளைப்பற்றி **யார் வேண்டுமானாலும்** எனக்கு எழுதலாம். என்னைப்பற்றிய **பலவீனங்கள்,** தவறுகள் சில சமயங்களில் எனக்குத் தெரிவதில்லை. என் முதுகு எனக்கு தெரியாது. முதுகில் உள்ள குறையை **வேறு யாராவது சுட்டிக்காட்டினால்** நான் அறிந்து கொள்ள முடியும். அப்படி

சுட்டிக்காட்டினால் அதை சரிப்படுத்திக் கொள்ள தயங்கமாட்டேன். என் குறையை அல்லது தவறுகளைப் பெரும்பாலும் யாரும் எனக்கு சுட்டிகாட்ட தயங்குகின்றனர். **என்மேல் உள்ள அன்பினால் மரியாதையினால்** என்னிடம்கூற பயப்படுகின்றனர். வாசிக்கிற நீங்கள் என் தவறை சுட்டிகாட்டா விட்டால் மற்ற ஊழியர்கள் கர்த்தரை விட்டு ஜீவிப்பது போல நானும் கர்த்தரை விட்டு விலகநேரும்.

அந்த வகையில்தான் பலருக்கு ஆலோசனை கூறுகிறேன் என்று 2-12-82 ல் சென்னை **அற்புத** ஊழியக்காரர் ஒருவர் தன் கடிதத்தில் **கடைசி வரியாக** இப்படி எழுதினார். **நீர் ஊழியத்தில் தலை காட்டமுடியாதபடி செய்ய என்னால் முடியும்!** எச்சரிக்கை! என்று எழுதினார். இக்கடிதம் மொட்டை கடிதம் அல்லா. கையெழுத்தும் அதில் இட்டுள்ளார். இன்னும் சிலர் மிக கீழ்தரமான முறையில் பெண்கள், படிக்க கூசும் வார்த்தைகளை உபயோகித்து என்னைத் **திட்டியும், ஏசியும்** எழுதியுள்ளார். சிலர் தொலைபேசியில் **மிரட்டல்** வார்த்தைகள் பேசுகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு நான் சொல்லிக்கொள்வது என்னவென்றால் யாரும் மேற்கண்ட பாணியில் எனக்கு அறிவுரைக்கூற முயலவேண்டாம். இந்த விதமான முறை நாகரீகமில்லாதது. ஆகவே இந்த முறையை பின்பற்றி கடிதம் எழுதவேண்டாம். அதில் உங்களுக்கும் எனக்கும் பிரயோஜனமில்லை. சிலர் தொலைப்பேசியில் என்னை மிரட்டியும் பேசியுள்ளார்கள். அப்படி செய்யவேண்டாம். அதனால என்னை மாற்றவோ தடுக்கவோ முடியாது. பயமுறுத்தவும் முடியாது.

நீங்கள் என்னில் பிழையாக எதை பார்த்தீர்களோ,பத்திரிக்கை, என் பிரசங்கம் அல்லது என் தனிப்பட்டவாழ்க்கையின் குறைகளானாலும் அவைகளைக் குறித்து எனக்கு தைரியமாக எழுதுங்கள். அதை வரவேற்கிறேன். அப்படி எழுதினால் நான் என்ன நினைத்துக் கொள்வேனோ என்று சந்தேகப்பட வேண்டாம்.

ஒரு வேளை எனக்கு கடிதம் எழுதும் உங்களுடைய மேல்விலாசம் எழுத பிரியப்படா விட்டால் (என் விஷயத்தில மட்டும்) மொட்டைக் கடிதம் எனக்கு எழுதலாம்.என்னைப் பற்றி அறிந்த விஷயமானாலும் கேள்விபட்ட விஷயமாக இருந்தாலும் எனக்கு எழுதலாம். அது சரியாக இருக்குமானால் என்னை நான் சரிப்படுத்திக்கொள்ள அவை மிகவும் உதவும். என்னைப்பற்றி அறிந்துகொள்ள இரண்டு மாதத்துக்கு ஒருமுறை அல்லது மூன்று மாதத்துக்கொரு முறை நான் தனியாக உபவாசம் செய்து என்னை நான் ஆராய தனிமையான இடத்துக்கு ஜெபிக்க இப்போதும் போய்க் கொண்டிருக்கிறேன்.

அந்த தனிமை நேரங்களில் என் குடும்பத்துக்காகவோ, என் ஊழியத்துக்காகவோ ஜெபிப்பதில்லை. அந்த முழு நேரமும் **என் குறைகளை, தவறுகளை** கண்டுபிடித்து **ஆராயவே** செலவிடுவேன். அங்குபோய் **கர்த்தாவே என் குறைகளை, என் தவறுகளை எனக்குக் காட்டும் என்று ஜெபிக்கமாட்டேன்.** காரணம் **என் தவறுகள் என் குறைகள் எனக்கே தெரியும்.** ஆகவே நானே என்னை ஆராய்வேன். குறைகளை கண்டுபிடிப்பேன். **சரிப்படுத்திக் கொள்வேன்.**

முடிவில் என்னால் கண்டு பிடிக்க முடியாத குறைகளை, தவறுகளை கர்த்தரிடம் காட்டச்சொல்லி அல்லது உணர்த்த சொல்லி கேட்பேன். இதுதான் என்னை நான் தற்பரிசோதனை செய்யும் முறையாகும்.

எந்த ஊழியனுக்கு தன்னை **தற்பரிசோதனை** செய்து குறைகளை கண்டுபிடிக்க நேரம் இல்லையோ அல்லது விருப்பம் இல்லையோ அவனுக்கு விழுகை நிச்சயம். தன் குற்றங்களை கண்டுபிடிக்க முயற்சி செய்யாவிடில் தான் வீழுந்து போவதையும் வசனத்தைவிட்டு வழி விலகிப்போவதையும் அவனால் உணர்ந்து கொள்ளவே முடியாது.

**என்னைப்பற்றி** என் நிலையைப்பற்றி கூறி விட்டேன்.மனம் திரும்பின இரட்சிக்கப்பட்ட விசுவாசிகள் எனக்காக தொடர்ந்து ஜெபியுங்கள். ஆவியானவரால் உணர்த்தப்பட்டால் எனக்கு ஆலோசனை கூறி கடிதமும் எழுதுங்கள்.மற்ற ஊழியர்களுக்கு வந்த விழுகை எனக்கு நேரிடக்கூடாது என்ற பாரத்தில் பயத்தில் இவைகளையெல்லாம் என்னை நேசிக்கும் என் அன்பு வாசகர்களிடம் மிக வெளிப்படையாக பகிர்ந்து கொண்டேன்.இனி நீங்கள் என்னைப்பற்றி என்ன நினைத்தாலும் சரி. வழுவாத படி காக்கும் கர்த்தர் என்னையும், உங்களையும் மரணம் வரை கை பிடித்து நடத்துவாராக. ஆமென். **கடிந்து கொள்கிறவன் முடிவில் அங்கீகாரம் பெறுவான்.** நீதி 28:23.

☐ சகோ. **சாம் ஜெபதுரை** 1000 கணக்கான புஸ்தகங்களை எழுதியவர். நான் **ஏமன்** என்ற நாட்டில் ஊழியம் செய்துகொண்டிருந்த போது அவர் எழுதிய கருத்துக்கள் மிக தவறு என்று ஜாமக்காரனில் கேள்வி பதில் பகுதியில் எழுதினேன். அதற்கு அவர் ஜாமக்காரனில் அவரை தாக்கி எழுதியதால் **தன் ஊழியத்துக்கு பெரும் நஷ்டம்.** ஆகவே நஷ்ட பரிகாரமாக **1 கோடி ரூபாய்** குறிப்பிட்ட தேதிக்குள் தனக்கு அனுப்பாவிட்டால் கோர்ட்டில் நாம் சந்திக்க நேரும் என்று எழுதினார். நான் இந்தியா வந்து சேர்ந்தபின் **எனக்காக வாதாட** வக்கீல் யாரையும் வைக்கவில்லை. நிதிமன்றத்தில் நானே வாதிட போகிறேன். இதையும் ஜாமக்காரனில் என் வாசகர்கள் அளிவதற்காக எழுதினேன்.

உடனே **தூத்துக்குடி,** சென்னை ஆகிய இடங்களிலிருந்து சகோ. **சாம் ஜெபதுரை** தன் பத்திரிக்கையான **அன்றன்றுள்ள அப்பம்** என்ற பத்திரிக்கையில் அவர் எழுதிய மேலும் வேறு பல **தவறான வசன விளக்கங்களை** குறிப்பிட்டு தபாலில் அனுப்பி உதவினர். அதற்குள் தமிழ் நாடு முழுவதும் உள்ள **அவர் பத்திரிக்கை** வாசகர்களும் உயர் நீதிமன்ற கிறிஸ்தவ வக்கீல்களும் எனக்கு வக்கீல் நோட்டீஸ் அனுப்பிய கிருஸ்தவ வக்கீல் அவர்களும் சகோ. **சாம் ஜெபதுரை** அவர்களை டாக்டர் புஷ்பராஜ் அவர்களுக்கு **வக்கில் நோட்டீஸ்** அனுப்பியது தவறு என்று அவரை கண்டித்தனர்.

☐ **பிஷப்மார்களின்** தவறுகளை நான் சுட்டகாட்டி **ஜாமக்காரனில்** எழுதினேன். ஒரு **பிஷப்பின் பாவ தொடர்ப்புகளையும்** எழுதினேன். பாதிக்கப்பட்ட **சிறுமியின் பெற்றோர்** விசாரணை வைத்தால் பாதிக்கப்பட்ட **சிறுமியின் பெற்றோரும்** அந்த **பிஷப்** அவர்களால் நேரில் வந்து சாட்சி அளிப்பதாக எழுதினார். பாதிக்கப்பட்ட **ஆயர்களின் மனைவிமார்களும்** நேரில் வர தயாராக இருந்தார்கள். இது **மார்தோமா சபை** என்ற **கேரள சபையானதால்** அவர்களின் **தலைமை பிஷப்புக்கு** பாதிக்கப்பட்டவர்கள் அத்தனை பேர்களும் கடிதம் எழுதினார்கள். **பாவம் செய்த பிஷப்பின்** மேல் எந்த நடவடிக்கையும் எடுக்காததால் நான் என் **ஜாமக்காரன்** (மலையாளம்)

**பத்திரிக்கையில்** பெயர் **குறிப்பிடாமல்** பிஷப்பின் **பாவ விவரங்களை** மட்டும் எழுதினேன். எனக்கு **கேரளத்திலும்** தமிழ்நாட்டிலும் வெளி நாடுகளிலும் **ஆயிரக்கணக்கான** வாசகர்கள் உண்டு.

நான் எழுதிய சம்பவம் **மார்த்தோமா சபையினருக்கும்** ஆயர்களுக்கும் பெருத்த அவமானத்தை உண்டாக்கியது. உடனே அவர்கள் **மார்தோமா சபையின்** அத்தனை **மண்டல நிர்வாகிகளையும் கூட்டி** எனக்கு எதிராக **கோர்ட்டில் மான நஷ்ட வழக்கு** தொடர ஏற்பாடுகள் செய்தார்கள். அதில் **மூத்த வழக்கறிஞர்** ஒருவர் கமிட்டியில் இவ்வாறாக கூறினார். நாம் **டாக்டர் புஷ்பராஜ்** அவர்களுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தால் அவரே சாட்சியுடன் கோர்ட்க்கு வந்து **அவரே வாதாடுவதால்** அவமானம் நம்முடைய **பிஷப்மார்களுக்குதான்** உண்டாகும். இந்த **பிரச்சனையை** டாக்டருடன் **பேசி தீர்த்துக்கொள்வோம்** என்றார். அப்படியாக அந்த வழக்கு கோர்ட்க்கு போகாமல் ஞானமாக தடுத்தார்கள். இன்றைய காலம் மாதிரி அன்று **போஸ்கோ** சட்டம் இல்லை. இருந்திருந்தால் பாவம் செய்த அந்த **இரண்டு பிஷப்மாரும்** ஜெயிலுக்கு போய் வந்திருப்பார்கள். இதில் பிஷப்மாரில் சிலர் அவசரப்பட்டு **என்னை தங்கள் சபையிலிருந்து நீக்குவதாக** EXCOMUNICAT செய்வதாக எனக்கு ரெஜுஸ்டர் தபால் அனுப்பினார்கள். இனி **மார்தோமா சபையில்** எங்கும் நீங்கள் **பிரசிங்கிக்கக் கூடாது** என்று எழுதி அனுப்பினார். அப்படியே அவர்கள் பத்திரிகையான சபா தாரகையிலும் எழுதி அறிவித்தார்கள்.

உடனே நான் பதில் கடிதம் எழுதினேன், நான் **CSI சபையை சேர்ந்தவன்** அப்படியிடிருக்க என்னை எப்படி **உங்கள் சபையிலிருந்து நீக்க முடியும்?** இதை நீங்கள் யோசிக்கவில்லையா? மேலும் **நானாக எந்த சபையினரிடமும்** என்னை அழையுங்கள், நான் நன்றாக பிரசங்கம் பண்ணுவேன் என்று கேட்டதேயில்லையே! 1969ம் வருடம் நீங்களாகவே **பிஷப் மூலமாக முறைப்படி எனக்கு அழைப்பு கடிதம் எழுதினீர்கள்,** வந்தேன். பிரகங்கித்தேன். அப்படியிருக்க என்னை எந்த அடிப்படையில் உங்கள் சபையிலிருந்து நீக்க முடியும். இந்தியாவில் **கேரள மார்தோமா** சபையில் 2460 சபைகளிலும், வெளிநாட்டில் 760 சபைகளிலும் **கன்வென்ஷனில்** பிரசங்கித்துள்ளேன். **அமெரிக்காவிலும்,** ஆஸ்ட்ரேலியாவிலும், **அரேபியா** ஆகிய நாடுகளிலும் ஒரே சபையில் நான்கு முறை அழைக்கப்பட்டு பிரசங்கம் செய்துள்ளேன். **மார்தோமா சபை** மக்கள் என்னை அவ்வளவாக நேசித்தார்கள். இப்போதும் அவர்கள் என்னை மிகவும் நேசிக்கிறார்கள்.

என்னை மார்தேமா சபையிலிருந்து நீக்கிவிட்டதை மார்தோமா சபையின் **அதிகார பூர்வமான** பத்திரிக்கையான **சபா தாரகையில்** வெளியிட்டனர்.

உடனே மார்தோமா சபை மக்கள் அனைவரும் பொங்கி எழுந்தனர். எதற்காக டாக்டர் புஷ்பராஜ் நீக்கப்பட்டார் என்று கேட்க ஆரம்பித்தனர். எனக்கும் காரணம் கேட்டு சபை மக்கள் கடிதம் எழுதினார்கள்.

உடனே நான் தலைமை பிஷப் **அலெக்ஸாண்டர் வெல்லிய திருமேணி** என்று அழைக்கப்படும் சுமார் 25 பிஷப்மார்களுக்கு **தலைமை பிஷப்** அவர்களுக்கு கடிதம் எழுதினேன். நீங்கள் என்னை மார்தோமா சபையிலிருந்து நீக்குவது உங்கள் இஷ்டம். ஆனால் **ஏன் நான்**

**நீக்கப்பட்டேன் என்ற காரணம்** எழுதவில்லையே! உங்கள் சபை மக்கள் என்னிடம் காரணம் **கேட்கிறார்கள்** பண ஊழல் காரணமாக நீக்கப்பட்டேனா? **பெண்கள்** விஷயமாக நீக்கப்பட்டேனா? காரணம் என்ன சொல்ல.? அடுத்த மாத உங்கள் **டையோசிஸ்** பத்திரிக்கையில் **காரணம் நீங்கள் எழுதாமல் போனால்** என் ஜாமக்காரனில் உங்கள் பிஷப்மார்களின் லீலைகளை சகல ஆதாரத்தோடும் **பிஷப்மார்களின் புகைப்படத்தோடும்** நான் எழுதுவேன். காரணம் என் **நிரபராதித்துவம்** குறித்து மார்த்தோமா **சபை ஜனங்கள்** அறியவேண்டுமே! மற்றப்படி அவர்கள் யாவருக்கும் என் மேல்தான் தவறு என்று நினைப்பார்களே! என்று எழுதினேன்.

கடிதம் கிடைத்த உடன் 11 ஆயர்கள் அங்கியுடன் ஒரு குழு இரண்டு கார்களில் புறப்பட்டு என் வீட்டுக்கு வந்து என்னை **சமாதானப்படுத்த வெல்லிய திருமேனி** அவர்கள் அனுப்பி **பாவம் செய்த பிஷப்பைப்பற்றி** ஜாமக்காரனில் எழுதவேண்டாம் என்று வியைத்தோடு கேட்டுக்கொண்டதாக கூறினார்கள். அப்போது நான் கூறினேன். ஐயா உங்கள் **டையோசிஸ் பத்திரிகையில்** எதற்காக **மார்தோமா சபையில்** யாரும் என்னை கன்வென்ஷனுக்கு **அழைக்கக்கூடாது என்று கட்டளையிட்டார் என்பதற்கான காரணத்தை எழுதினால்** நான் என் பத்திரிகையில் ஒன்றும் எழுதமாட்டேன் என்றேன். அதற்கு அவர்கள் அப்படி **பிஷப் செய்த பாவத்தை** பத்திரிகையில் எழுதினால் எங்கள் **முழு சபைகளுக்கும்** பெரிய அவமானம் ஆகும். ஆகவே அதை மட்டும் தயவுசெய்து கட்டாயப்படுத்த வேண்டாம். என்றார்கள். அப்படியானால் நீங்கள் **காரணம் எழுதாமல்** போனால் **எனக்கு பெருத்த அவமானம் உண்டாகாதா?** ஆகவே **அடுத்த மாத ஜாமக்காரனில் மார்தோமா ஸ்பெஷல்** என்ற தலைப்பில் உங்கள் இரண்டு **பிஷப்மார்கள் பெயர்** அவர்கள் செய்த **பாவம்**, பாதிக்கப்பட்டவர்களின் **குடும்ப விபரம்** முழுவதையும் எழுதுவேன். என்னை மன்னித்துவிடுங்கள். என் **நிரபராதித்துவம்** தெரிவிப்பது **என் ஊழியத்துக்கு மிக முக்கியம் அல்லவா!**, உங்கள் டையோசிஸ் பத்திரிகை இந்தியாவில் மட்டும் சபை மக்களுக்கு அனுப்பப்படுகிறது. ஆனால் **என் பத்திரிகை** ஜாமக்காரன் (தமிழ் & மலையாளம்) இரண்டு பாஷையிலும் **162 உலக நாடுகளில்** சபை வித்தியாசம் இல்லாது **அனைத்து சபை மக்களும் படிக்கிறார்கள்**. என்னை தடுக்க வேண்டாம் என்று கூறி **அடுத்த மாதமே** புகைப்படத்தோடு அத்தனை **பிஷப்மார்களை பற்றி தெளிவாக எழுதினேன்.** அதன்பின் மார்தோமா சபை ஒரு சிலர் மட்டும் என்னோடு தொடர்பு கொள்வதையும் காணிக்கை அனுப்புவதையும் நிறுத்திக்கொண்டார்கள். அப்படி நிறுத்தியவர்கள் வீட்டில் மனைவி பிள்ளைகள் யாவரும் தங்கள் ஜெபக்குறிப்புகளை இப்போதும் எனக்கு அனுப்பி கொண்டிருக்கிறார்கள்.அந்த வீடுகளில் கணவர்மார்கள் மட்டும் என்னோடு பேசுவது இல்லை. ஆனால் ஜாமக்காரன் பத்திரிகை மலையாள பாஷையில் இப்போதும் அவர் பெயருக்கு அவர் வீட்டுக்கு போய் கொண்டிருக்கிறது.

இப்படியாக **மார்தோமா சபை** என் ஜாமக்காரனையும் **என்னையும்** வெறுத்தார்கள்.

☐ **பெந்தேகோஸ்தே** சபைகள் பேசும் **அன்னிய பாஷை** பொய்யான பாஷை ஆகும். **பாஸ்டரும்** பொய் பேசுகிறார். **பரிசுத்த ஆவியானவரின்** நிறைவுக்கு **அன்னிய பாஷை** அடையாளம் என்று **வேதம் கூறவில்லை.** அன்னிய பாஷை **வரம்** (Gift) என்று எழுதினேன். **வரம்**

கொடுக்கப்படுவது, **கேட்கப்படுவது அல்ல** என்று எழுதினேன். உடனே பெந்தேகோஸ்தே சபையில் உள்ள சில மக்கள் என்னை வெருக்க தொடங்கினார்கள்.

- TPM **சிலோன் பெந்தேகோஸ்தே** சபையை பற்றி எழுதினேன்.

(மேய்ப்பர்) **பாஸ்டர்கள்** கலியாணம் செய்து கொள்ள வேண்டும். தன் **சொந்த குடும்பத்தை** சரியாய் நடத்தாதவன் **சபையை** எப்படி நடத்துவான், **மூப்பன்** (கண்காணி) மேய்ப்பர் ஒரே **மனைவியை** உடையவனாக இருக்க வேண்டும் என்று பவுல் தீமோத்தேயுவுக்கும் தித்துவுக்கும் எழுதிய வசனங்களை சுட்டிக்காட்டி எழுதினேன். உடனே (TPM) (சிலோன் பெந்தேகோஸ்தே) சபையினர் **என்னை வெறுத்தனர்.**

இவர்களுக்கெல்லாம் **காணிக்கை** அல்லது **தசம பாகம்** என்று பணம் கொடுத்து பாருங்கள் . உடனே **உங்களை கை வைத்து ஆசீர்வாத** ஜெபம் சொல்லி அந்த பணத்தை வாங்கிக்கொள்வார்கள் . அப்படியே **கல்யாணத்தில் வரதட்சனை** வாங்குவது தவறு என்று **பிரசங்கிக்கவே** மாட்டார்கள். எவ்வளவு **வரதட்சனை** கொடுக்க போகிறார்கள் என்று கேட்டு அந்த **தொகையில்** கணக்கு போட்டு **அதில் தசமபாகம்** எவ்வளவோ அந்த பணம் கைக்கு வந்த உடன் தான் **தாலி எடுத்துகொடுத்து** ஆசீர்வதித்து ஜெபிப்பார்கள். இன்று **அனைத்து பெந்தேகோஸ்தே** சபைகளும் **சபை மக்களின் தசமபாக பணத்தில்தான்** ஓடிக்கொண்டிருக்கின்றன. **தசம பாகம்** தராவிட்டால் **சபிக்கவும்** பிரசங்கத்தில் **மறைமுகமாகவும்** சுட்டிக்காட்டி **ஏசியும் சபித்தும்** பிரசங்கம் செய்வார்கள்.

**புதிய ஏற்பாட்டு சபைக்கு** தசமபாக உபதேசம் **இல்லை** என்று **ஆதாரத்தோடு** எழுதினேன். **பெந்தேகோஸ்தேகாரர்கள்** மட்டுமல்ல **தசமபாகம்** வாங்கும் **சபை பாஸ்டர்கள்** அத்தனை பேரும் **என்னை வெறுத்தார்கள்.**

இப்படியாக ஜாமக்காரனில் என்னென்ன வி ஷயங்களை **போலி கிறிஸ்தவர்களுக்கு பாதகமாக** எழுதினேனோ அத்தனைபேரும் என்னை வெருத்து ஒதுக்கினார்கள். ஆனால் **வேத வசனத்தை** நன்றாக அறிந்த **உண்மை கிறிஸ்தவர்கள்** மட்டும் இன்றுவரை என்னை நேசிக்கிறார்கள். எனக்காக ஜெபிக்கிறார்கள். எனக்கு இன்று வரை **காணிக்கை** அனுப்பிக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

என்னை தவிர மற்ற ஊழியர்களாக இருந்தால் **ஊழியத்தை நிறுத்தி** உண்மை உபதேசத்தை விட்டுவிட்டு **வருமானம் கிடைக்கும் சபைக்கு** உதவி ஊழியராக **செயல்பட்டு** தன் ஆத்துமாவை இழந்து ஆண்டவரை **விட்டு விலகி குடும்பம் நடந்தால் போதும்** என்று இருப்பார்கள்.

ஆகவே நான் கூற விரும்புவது என்னவென்றால் நம் **ஜீவியத்தில், ஊழியத்தில், பண விஷயத்தில், பெண்கள் விஷயத்தில்** பாலியல் குற்றச்சாட்டு இல்லாமல் நம் **மனசாட்சியில் கர்த்தருக்குமுன்** குற்றமற்றவராக இருந்தால் யாருக்கும் நாம் பயப்பட தேவையில்லை.

## தவறான ஊழியரை பின்பற்றி பொய்யான ஊழியம் செய்யும் ஊழியர்கள்

1. மறைந்த **சகோ. D.G.S தினகரன் தினசரி பரலோகம் போய் வருகிறேன்** என்ற பல பொய்களை பேசி பண விஷயத்தில் விழுந்துபோய் கர்த்தரை விட்டு விலகினார்.
2. **ஆலன்பால்** தினகரன் பேசிய அதே பொய்களை பேசி, மேலும் புதிய பொய்களையும் பேசுபவர்.
3. **மோகன் C. லாசரஸ் கர்த்தர்** சொன்னார் என்று கூறி ஏராளமான பொய்களை பேசியவர். HIV ஏய்ட்ஸ் வியாதி இவர் ஜெபம் மூலம் சுகமானது என்று துணிகரமாக பொய் பேசியவர். இப்போதும் ஏராளமான பொய்களை கர்த்தர் சொன்னார் என்ற பெயரில் கூறிக்கொண்டிருக்கிறார்.
4. பாஸ்டர் **விக்டர் ஞானராஜ்** தூதர்களை வரவழைத்து தன் மனைவிக்கு தெரியாமல் ஆப்பம் தேங்காய்பால் கொடுத்து அனுப்பியதாக கூறியவர் (இப்போது இறந்து போனார்).
5. Rev. **ஆனந்த ஸ்ரா** செத்து போனவர்கள் 9 பேரை உயிரோடு எழுப்பினேன் என்று பொய் கூறியவர்.
6. **ஆல்வின் தாமஸ்** 7. சகோ. **எசேக்கியல் பிரான்சிஸ்** 8. பால் **தினகரன்** 9. **ஜட்சன் ஆபிரகாம்** 10. **ஸ்டிபன்**

இனியும் ஏராளமான ஊழியர்கள் தமிழ்நாட்டிலும் கேரளத்திலும் பெருகிவிட்டனர். இவர்கள் யாவரையும் வாசகர்கள் நம்ப வேண்டாம் இவர்கள் உபதேசத்தை பின்பற்ற வேண்டாம். (இது ஜாமக்காரன் வாசகர்களுக்கான எச்சரிக்கையாகும்).

**JULY - 2024**

# Printed Book (Periodical)


**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription :**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**


**Return Requested:**


**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**



Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.